Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 333

ஞாயிற்றுக்கிழமை
26 ஒக்ரோபர் 2025

ஐப்பசி 09ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60

## ஹெரோய்னுடன் இளைஞர் கைது

விரிவு பக்கம்:- 15

## செவ்வந்தியின் விசாரணையில் சிக்கிய கஞ்சா

விரிவு பக்கம்:- 15

அநுர அரசின் ஆட்சியிலும்

# மழுங்கடிக்கப்படுகின்றன தமிழர்களின் உரிமைகள்!

சிறிதுங்க ஜயசூரிய சுட்டிக்காட்டு



**கொழும்பு, ஒக்ரோபர் 26**

**முன்னாள் ஜனாதிபதிகளான ரணில் மற்றும் ராஜபக்சக்களின் காலத்தைப்போன்று, தற்போதும் தமிழர்களின் உரிமைகள் சார்ந்த முக்கியத்துவம் மழுங்கடிக்கப்பட்டு வருகின்றது என்று ஐக்கிய சோஷலிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்துள்ளார்.**

15

முறைகேடான சொத்துக்குவிப்பு

## 11 பேருக்கு எதிரான விசாரணைகள் தீவிரம்

சொத்துகளை முடக்கவும் நடவடிக்கை



யாழ்ப்பாணம், ஒக். 26
வாள்வெட்டு மற்றும் போதைப்பொருள் கடத்தல் என்பவற்றில் ஈடுபட்டு, சட்டவிரோதமாகவும், முறைகேடாகவும் சொத்துச் சேர்த்த சந்தேகத்தில் 11 பேருக்கு எதிராக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன

15

சுமத்ராவில் நிலநடுக்கங்கள்

## நவ. 5ஆம் திகதி சுனாமி ஒத்திகை!

கொழும்பு, ஒக். 26
இந்தோனேசியாவின் சுமத்ரா தீவில் கடந்த சில நாள்களாக நிலநடுக்கங்கள் அதிகரித்துவரும் நிலையில், முற்பாதுகாப்பு நடவடிக்கை

15

## மணல் கடத்தியவர் மீதே துப்பாக்கிப் பிரயோகம்!

பொலிஸார் விளக்கம்

## வெள்ளத்துக்கு மணல்கொட்டியவர் மீதே பொலிஸார் தாக்குதல் நடத்தினார்கள்

உறவினர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக். 26
யாழ்ப்பாணம் - கொடிகாமத்தில் கிணறு வெட்டிய மணலை வெள்ளம் தேங்கும் இடத்தில் கொட்டிக் கொண்டிருந்த இளைஞன் மீதே பொலிஸார் துப்பாக்கி சூடு நடத்தியதாக இளைஞரின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.
கொடிகாமம் பகுதியில் மணலுடன் பயணித்த உழவியந்திரத்தின் மீது பொலிஸார் நேற்றுமுன்தினம் துப்பாக்கிச்சூடு நடத்தியிருந்தனர். மணல்கடத்தலில் ஈடுபட்ட நபர் மீதே துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது என்றும், பொலிஸாரால் இடைமறிக்கப்பட்ட போதிலும் நிற்காமல் சென்றதைத் தொடர்ந்தே துப்பாக்கிப் பிரயோகத்துக்

15





## சுன்னாகத்தில் வீட்டின்மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், ஒக். 26
சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கந்தரோடை பகுதியில் உள்ள

15

**முச்சந்தி முரளி**

**'அப்ப இன்டைக்கு வடக்கில எல்லாரும் கரண்ட் இல்லாமல் கதகளி ஆடப்போயினம் போல'**

## வடமாகாணத்தில் இன்று 13 மணிநேர மின்வெட்டு!

மன்னார் மட்டும் விதிவிலக்கு

யாழ்ப்பாணம், ஒக். 26
மன்னார் மாவட்டம் தவிர்ந்த வடக்கு மாகாணத்தின் ஏனைய நான்கு மாவட்டங்களிலும் இன்று 13 மணிநேர மின்வெட்டு நடைமுறையாகும் என்று இலங்கை

15

# சஞ்சீவி

A- (LKA)/Stable
பிட்ச் ரேட்டிங்
பிட்ச் ரேட்டிங் லங்கா லிமிடட்
வலுவான நிலையான பாதுகாப்பான
37 மாதங்கள் 12.5% (ச.வ.வி 11.15%)
01 மாதம் 7.5% (ச.வ.வி 7.76%)
06 மாதங்கள் 8.5% (ச.வ.வி 8.68%)
011 237 5385
Abans Finance

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி 25.10.2025
சீட்டிழுப்பு இலக்கம் 4235
ஆங்கில எழுத்து I
வெற்றி இலக்கங்கள் 02 19 44 57
விசேட எழுத்து I

**ஹந்தஹறண ராசி சுப பலன்**
திகதி 25.10.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1302
வெற்றி இலக்கினம் விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள் 06 13 38 46

**NLB ஜய**
திகதி 25.10.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0261
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கங்கள் 7 8 3 4

**மெகா பவர்**
திகதி 25.10.2025
சீட்டிழுப்பு இலக்கம் 2341
ஆங்கில எழுத்து K
சுப்பர் இலக்கம் 09
வெற்றி இலக்கங்கள் 05 22 24 63

**மஹஜன சம்பத**
திகதி 25.10.2025
சீட்டிழுப்பு இலக்கம் 5993
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கங்கள் 7 8 3 9 4 0

**தன நிதானய**
திகதி 25.10.2025
சீட்டிழுப்பு இலக்கம் 2023
ஆங்கில எழுத்து O
வெற்றி இலக்கங்கள் 10 18 28 63
விசேட எழுத்து O

**அத சம்பத**
திகதி 25.10.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0568
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கங்கள் 3 9 4 0

**சுப தவசக்**
திகதி 25.10.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0109
வெற்றி இலக்கினம் ரிஷபம்
வெற்றி இலக்கங்கள் 04 30 57



# வடக்கு மாகாணத்தில் முதலீட்டாளர் மாநாடு

## ஜனவரியில் நடத்தத் தீர்மானம்

**யாழ்ப்பாணம், ஒக்.26**

**வடக்கு மாகாண முதலீட்டாளர் மாநாட்டைத் தொடர்புடைய அரச திணைக்களங்களின் ஆதரவுடன் அடுத்த ஆண்டு ஜனவரியில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக 'த மனேஜ்மன்ட் க்ளப் இலங்கை' தெரிவித்துள்ளது.**

வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் வடக்கு மாகாணப் பிரதம செயலாளர், வடக்கின் ஐந்து மாவட்டங்களினதும் மாவட்டச் செயலர்கள், பிரதேச செயலாளர்களின் பங்குபற்றுதலுடன் 'த மனேஜ்ட்மன்ட் க்ளப்' பினருடனான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை யாழ்.சுண்டுக்குளியில் அமைந்துள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றபோது இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது. இதில் வடக்கு ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவிக்கையில்,

தற்போதைய அரசாங்கத்தின் காலத்தில் முதலீட்டுக்கான சூழல் கனிந்துள்ளது. இதனை நாங்கள் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

அந்தவகையில் 'த மனேஜ்ட்மன்ட் க்ளப்' வடக்குக்கான முதலீட்டாளர் மாநாட்டை எதிர்வரும் ஜனவரி மாதம்21 மற்றும் 22 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் நடத்துவதற்கு எதிர்பார்த்துள்ளனர்.

இலங்கை முதலீட்டுச்சபை, ஏற்றுமதி அபிவிருத்திச்சபை, தேசிய ஏற்றுமதியாளர்கள் சபை, இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம், தொழில்துறை அமைச்சகங்கள் மற்றும் வெளிவிவகார அமைச்சின் ஆதரவுடன் இந்த மாநாட்டை முன்னெடுப்பதற்கு அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

மாநாட்டுக்குத் தேவையான எமது வடக்கு மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்தினதும் தகவல்கள் மற்றும் முதலீட் டுக்கான வாய்ப்புகள் தொடர்பான ஒத்துழைப்புகளை வழங்குவதன் ஊடாக எமது மாகாணத்தை மேம்படுத்தமுடியும்.

உள்நாட்டு மொத்தத்தேசிய உற்பத்திக்கு எமது மாகாணம் 4.2 சதவீதமே பங்களிப்புச் செய்கின்றது. அதனை ஆகக் குறைந்தது 10 சதவீதமாகவேனும் உயர்த்தவேண்டும். அதற்கு இவ்வாறான முதலீட்டாளர் மாநாடுகள் நடைபெற வேண்டும் என்பதுடன் அதன் ஊடாக எமது மாகாணத்தை நோக்கி முதலீட்டாளர்களும் வர வேண்டும். முதலீட்டாளர்கள் இங்கு வருகின்றபோது அவர்களுக்கான ஒத்துழைப்புகளை அரச அதிகாரிகள் வழங்கவேண்டும்- என்றார். (ச-66)

**சுபிரி தன சம்பத**
திகதி 25.10.2025
தினம் சனிக்கிழமை
வெற்றி வாரம் 0701
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கம் 1 9 3 2 2 4

**Super Ball**
திகதி 25.10.2025
தினம் சனிக்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 2967
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கம் 10 29 39 70

**சனிதா**
திகதி 25.10.2025
தினம் சனிக்கிழமை
ஆங்கில எழுத்து Q
வெற்றி இலக்கம் 17 67 68 79
வெற்றி வாரம் 5028

**SASIRI**
திகதி 25.10.2025
தினம் சனிக்கிழமை
வெற்றி வாரம் 0799
வெற்றி இலக்கம் 17 22 40

**லக்ன ராசி**
திகதி 25.10.2025
தினம் சனிக்கிழமை
தனுசு
வெற்றி இலக்கம் 07 11 34 35
சீட்டிழுப்பு வாரம் 4679

**KAPRUKA**
திகதி 25.10.2025
தினம் சனிக்கிழமை
ஆங்கில எழுத்து M
சுப்பர் இலக்கம் 26
வெற்றி இலக்கம் 38 42 65 71
வெற்றி வாரம் 2143

**அத கோடிபதி**
திகதி 25.10.2025
தினம் சனிக்கிழமை
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கம் 04 24 59 68
வெற்றி வாரம் 2793

**JAYODA**
திகதி 22.10.2025
தினம் புதன்கிழமை
ஆங்கில எழுத்து V
வெற்றி இலக்கம் 19 20 29 67
வெற்றி வாரம் 2172

# வன்புணர்வு செய்யப்பட்டு வயோதிபப் பெண் கொலை

கொழும்பு, ஒக்.26

வயோதிபப் பெண் ஒருவர் பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டு, முகத்தில் மிளகாய்த் தூள் தூவி, கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் மினுவாங்கொடை பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் பதிவாகியுள்ளது.

கொலை செய்யப்பட்டவர் மினுவாங்கொடை, யட்டியனப் பிரதேசத்தில் வசிக்கும் 71 வயதுடைய பெண் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அந்தப் பெண்ணின் கணவர் இரண்டு வருடங்களுக்கு முன்னர் உயிரிழந்த நிலையில் குறித்த பெண் தனியாகவே வீட்டில் வசித்து வந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மினுவாங்கொடப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

## வடக்கு மாகாண

# தொழில்முனைவோர் விருதுக்கு விண்ணப்பங்கள் கோரல்!

கொழும்பு, ஒக்.26

பெண்கள், இளைஞர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் போன்றோரின் தொழில்முயற்சிகளுக்கு தேசிய ரீதியிலான அங்கீகாரங்களை பெற்றுக்கொடுக்கும் முகமாக , 'வடமாகாண தொழில்முனைவோர் விருதுகள் 2025' வழங்கப்படவுள்ளது. இதற்கு தொழில்முனைவோரை விண்ணப்பிக்குமாறும் , யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்றுறை மன்றத்தினர் கோரியுள்ளனர்.

யாழ் . மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

நிகழ்வில் 16 பிரிவுகளில் 33 விருதுகள் வழங்கப்படவுள்ளன.

வடமாகாணத்தின் தொழில்முனைவோருடைய திறன்கள், அவர்களின் புத்தாக்கங்கள், தலைமைத்துவம் மற்றும் பொருளாதார பங்களிப்புகள் போன்றவற்றைப் பாராட்டுவதோடு தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளித்து, சிறந்த தொழில்முனைவோரை தேசிய மட்டத்தில் அடையாளம் காணப்படுவதை உறுதி செய்வதே இவ் விருதுகளின் பிரதான நோக்கமாகும். வடமாகாண தொழில்முனைவோர் விருதுகள்2025க்காக் விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்திசெய்து உடனடியாகச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்- என்றனர். (ச-இ)

# கோல்டன் விசாத் திட்டம் இலங்கையில் அறிமுகம்

கொழும்பு, ஒக்.26

நாட்டில் வெளிநாட்டு முதலீட்டை ஊக்குவிக்கும் நோக்கத்தில் புதிய நீண்டகால குடியிருப்புத் திட்டமான கோல்டன் விசாத் திட்டத்தை அரசாங்கம் அறிவித்துள்ளது. இந்தத் திட்டத்தின்மூலம் வெளிநாட்டவர்கள் இலங்கையில் நீண்டகாலம் வாழவும், முதலீடு செய்யவும் மற்றும் கல்வி கற்கவும் அனுமதிபெறமுடியுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் திட்டம் இலங்கையின் முதலீட்டாளர் விசா என்ற பிரிவின்கீழ் வருகின்றது.

வெளிநாட்டு முதலீட்டாளர்கள், அவர்களின் துணைவர் மற்றும் சார்ந்த குழந்தைகள் அனைவரும் இந்தக் குடியிருப்பு விசாவுக்கு தகுதிபெறமுடியும். விசாக் கட்டணம் வருடத்துக்கு 200 அமெரிக்க டொலர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா பாடசாலையின் முதல்வர் பொ.சிவரஞ்சன் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக வலிகாமம் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.சிவசிவா கலந்துகொண்டார். (ச-27,40)

# தவிசாளர் தன்னிச்சையால் அபிவிருத்திக்கு முட்டுக்கட்டை

*மாந்தை கிழக்குப் பிரதேசசபை உறுப்பினர்கள் வெளிநடப்பு*

முல்லைத்தீவு, ஒக்.26

**தவிசாளர் தன்னிச்சையாக அனைத்து பொறுப்புகளையும் தன்னகத்தே வைத்துள்ளார். சபையில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதனால் மக்களுக்கான அபிவிருத்திச் செயற்பாடுகளில் முன்னேற்றநிலையில்லை என்று தெரிவித்து மாந்தை கிழக்குப் பிரதேசசபை உறுப்பினர்கள் சபை அமர்வைப் புறக்கணித்து வெளிநடப்புச் செய்துள்ளனர்.**

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச சபை யின் மாதாந்த அமர்வு நேற்றுமுன்தினம் தவிசாளர் இராசையா நளினி தலைமையில் இடம்பெற்றபோதே சபை உறுப்பினர்கள் பலர் வெளிநடப்புச் செய்தனர்.

வெளிநடப்புச் செய்த உறுப்பினர்கள் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில், சபையில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. சபை உறுப்பினர்கள் முன்வைத்த கோரிக்கைகள் திணைக்களங்களுக்கு அனுப்பப்படாததுடன், அவற்றைச் செயற்படுத்துவதிலும் தவிசாளர் அலட்சியம் காட்டி வருகிறார். தவிசாளர் தன்னிச்சையாக அனைத்துப் பொறுப்புகளையும் தன்னகத்தே வைத்துள்ளார். இதனால் மக்களுக்கான அபிவிருத்தி செயற்பாடுகள் தடைப்படுகின்றன.

எந்தவித கட்சிபேதமுமின்றி அனைவரும் ஒன்றிணைந்து மக்களுக்கான அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் - என்றனர். இதேவேளை 13 உறுப்பினர்களைக் கொண்ட மாந்தை கிழக்கு பிரதேசசபை அமர்வில் ஐவர் வெளிநடப்பு செய்ததையடுத்து பெரும்பான்மை இல்லாத காரணத்தால் சபை கூட்டத்தை நடத்தமுடியாது எனத் தவிசாளர் அறிவித்து கூட்டத்தைப் பிற்போட்டார். (ச)

## கடமையில் மதுபாவனை 'யாழ்தேவி' ரயிலின் கட்டுப்பாட்டாளர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 26

கடமை நேரத்தில் மது அருந்திய குற்றச்சாட்டில், 'யாழ் தேவி' ரயிலின் தலைமைக் கட்டுப்பாட்டாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு கோட்டை நோக்கிப் பயணித்த குறித்த ரயில், நேற்றுப் பிற்பகல் 2.40 மணியளவில் அனுராதபுரம் தொடருந்து நிலையத்தை அடைந்துள்ளது. இதன்போதே, அந்த அதிகாரி மதுபோதையில் இருந்தமை அவதானிக்கப்பட்டு அவர் கைது செய்யப்பட்டுள்ளார். இதையடுத்து பிறிதொரு கட்டுப்பாட்டாளர் நியமிக்கப்பட்டதும் ரயில் பயணத்தைத் தொடர்ந்தது. (ம-26)


## சந்நிதியான் ஆச்சிரமத்தில் மகாபாரத சொற்பொழிவு


யாழ்ப்பாணம், ஒக்.26

சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வாக மகாபாரதத் தொடர் சொற்பொழிவு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் சைவப்புலவர் இரா. செல்வவடிவேல் கலந்துகொண்டு 'மகாபாரதம்' எனும் தலைப்பில் சொற்பொழிவு ஆற்றினார்.

இதேவேளை யாழ்.அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை நிர்வாகத்தின் கோரிக்கைக்கு அமைவாகத் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்குப் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. (ச-25,66)





## நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் உயர்வு

கொழும்பு, ஒக்.26

தற்போது நிலவும் அதிக மழையின் காரணமாக நாட்டின் பல நீர்த்தேக் கங்களின் நீர்மட்டம் மேலும் உயர்ந்துள்ளதாக நீர்ப்பாசனத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

காலி, மாத்தறை, களுத்துறை, கொழும்பு, கண்டி, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் அதிக மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது என்றும் திணைக்களம் கூறியுள்ளது. (ச-இ)







## முல்லைத்தீவு மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா

முல்லைத்தீவு, ஒக்.26

முல்லைத்தீவு மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா மாந்தை கிழக்கு பிரதேசசெயலாளர் பிரிவில் நேற்றுமுன்தினம் மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

பாரம்பரிய பண்பாட்டினைப் பேணிடும் நோக்கிலும் எதிர்காலத் தலைமுறையினருக்குக் கலை கலாசார மரபுகளை எடுத்துச் செல்லும் நோக்கிலும் குறித்த கலாசார விழா நிகழ்வுகள் ஒவ்வொரு பிரதேச செயலகத்தில் நடைபெற்றதுடன் இறுதியாக மாவட்ட கலாசார விழா அனைத்துப் பிரதேச செயலகங்களையும் உள்ளடக்கி நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாக வடமாகாண முன்னாள் பிரதம செயலாளர் இ.இளங்கோவன் கலந்து சிறப்பித்தார்.

இதன்போது கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் முதுகலைஞர்களுக்கு 'முல்லை கலைக்கோ' விருதுகளும் இளங்கலைஞர்களுக்கு 'இளஞ்சுடர்' விருதுகளும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்சாரசபையின் இரத்ததான நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.26

இலங்கை மின்சாரசபையின் 56 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு இலங்கை மின்சாரசபை வடமாகாண ஊழியர் நலன்புரி மற்றும் விளையாட்டுச் சங்கத்தினால் இரத்ததான நிகழ்வு நடத்தப்படவுள்ளது.

யாழ்.பழைய பூங்கா வீதியிலுள்ள இலங்கை மின்சாரசபையின் பிரதிப் பொதுமுகாமையாளர் அலுவலகத்தில் எதிர்வரும் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 9 மணி தொடக்கம் மதியம் 12 மணிவரை இரத்ததான நிகழ்வு நடைபெறவுள்ளது. (ச-25)

# வடக்கில் கடலட்டைப் பண்ணைகள்; அரசாங்கம் துணைபோகின்றது!

### வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.25

**வடக்கில் தடைசெய்யப்பட்ட கடற்றொழில் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. பாரம்பரிய மீன்பிடித் தொழிலை அழிக்கும் வகையில் கடலட்டைப் பண்ணைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. இதற்குப் பின்னால் பெரும் ஊழல் முறைகேடு இடம்பெற்றுவருவதுடன் அதற்கு இந்த ஆட்சியில் இடமளிக்கப்படுகின்றது என்று வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச உபதலைவர் நா.வர்ணகுலசிங்கம் தெரிவித்துள்ளார்.**


யாழ்.வடமராட்சி ஊடக இல்லத்தில் நடத்திய ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த சனிக்கிழமை கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர், நாரா, நெக்ரா நிறுவன அதிகாரிகள் இணைந்து யாழ்ப்பாணத்தில் கடலட்டைப் பண்ணைகள் தொடர்பில் நடத்திய கூட்டம் மீனவர்களது எதிர்ப்புக் காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

கடலட்டைப் பண்ணை விடயத்தில் பெரும் ஊழல் இடம்பெற்றுவருகிறது. தொடர்புடைய அதிகாரிகள் கையூட்டைப் பெற்றுவிட்டு அனுமதிகளை வழங்கி வருகின்றனர். கடலட்டைப் பண்ணைக்கு எதிராக முன்னர் மீனவர்கள் போராட்டம் நடத்தியபோது தற்போதைய கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரும் கலந்துகொண்டு அதை தடுத்துநிறுத்தவேண்டும் எனக் கூறினார்.

ஆனால் இன்று அமைச்சராக வந்த பின்னர் அந்நியச்செலவாணி கிடைக்கும் என்று காரணத்தைக் கூறி அட்டை பண்ணைகள் அமைப்பதை ஊக்குவித்துவருகிறார். பாரம்பரிய மீன்பிடித் தொழிலை அழிக்கும் வகையில் கடலட்டைப் பண்ணைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. இதற்குப் பின்னால் பெரும் ஊழல் முறைகேடு இடம்பெற்றுவருகிறது. அதிகாரிகள் கையூட்டைப்பெற்றுக்கொண்டுஇதற்குத் துணைபோகின்றனர்.

வல்வெட்டித்துறைக்கு வந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்ககூட உள்ளூர் இழுவைமடிப் படகுகளைத் தடைசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தடைசெய்யப்பட்ட தொழில்களை நிறுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் வாக்குறுதி வழங்கியிருந்தார். எனினும் தற்போது அரசியலுக்காக எமது பிரச்சினையில் குளிர்காய்கின்றனர். இதற்கெதிராக மீனவர் சமூகமாக நாமே எமது பிரச்சினைக்குக் குரல்கொடுக்கவேண்டும். கடற்றொழிலாளர் சமூகம் இனியும் மௌனமாக இருப்போமானால் இந்த மண்ணில் வாழமுடியாத நிலை ஏற்படும்- என்றார். (ச-100)





சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் கந்தசஷ்டி விரதம் அனுஷ்டிக்கும் 475 அடியவர்களுக்கு சந்நிதியான் ஆச்சிரம முன்றலில் வைத்து இலவச பழப்பொதிகள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன. (ச-25,66)

## வடக்கு நன்னீர் மீன்பிடிக்கு 9.91 மில்லியன் ரூபா ஒதுக்கீடு



கிளிநொச்சி, ஒக்.26

வடமாகாண விவசாயம் மற்றும் கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன, மீன்பிடி, நீர் விநியோகம் மற்றும் சுற்றாடல் அமைச்சின் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதி மூலம் 9.91 மில்லியன் ரூபா நன்னீர் மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.


அதன் முதற்கட்டமாக கிளிநொச்சி மற்றும் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த 44பேருக்கு நன்னீர் மீன்பிடி வலைகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வு நேற்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

வலையின் பெறுமதியில் மீனவர்கள் 50 வீதத்துக்கான பணத்தைச் செலுத்துவதுடன் 50வீதம் மானியமாக வழங்கப்படுகின்றது.

குறித்த நிகழ்வில் வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் சண்முகராஜா சிவசிறீ, கிளிநொச்சி மாவட்டச்செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (ச-113)

## நாட்டில் சிறந்த சூழல் இன்றி மருத்துவர்கள் வெளியேற்றம்



### அரச மருத்துவமனைகள் திண்டாட்டம்

கொழும்பு,ஒக்.26

அரச மருத்துவமனைகளில், மருத்துவர்களின் சேவைக்கேற்ற சூழல் இல்லாமையால், பல மருத்துவர்கள் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர். மருத்துவர்களைத் தக்கவைத்துக்கொள்வதற்கு, நம்பகமான திட்டம்கொண்டுவரப்படாத நிலையில், தொடர்ச்சியாக மருத்துவர்கள் நாட்டைவிட்டு வெளியேறி வருகின்றனர் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

நாட்டில் பல அரச மருத்துவமனைகளின் கட்டமைப்பில் ஒரு சில அடிப்படை வசதிகள் இன்றளவும் முறையாகப் பூர்த்தி செய்யப்படாமல் உள்ளன.

இதனால் மருத்துவமனைகளுக்கு வருகைதரும் நோயாளர்களுக்கு சிகிச்சைகளைத் தொடர்ச்சியாக வழங்குவதில் கடும் நெருக்கடி உருவாகியுள்ளது. மருத்துவமனைகளின் தேவைகளுக்கு ஏற்ப மருத்துவர்களைப் பணிக்கமர்த்துவது பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது.

அடிப்படை உட்கட்டமைப்பு வசதி, சுகாதார வசதி மற்றும் நோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவின் தரம் ஆகியவற்றில் ஏராளமான சிக்கல்கள் உள்ளன.

மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கான பற்றாக்குறை நோயாளிகளுக்கு மட்டுமல்ல, நோயாளி பராமரிப்புச் சேவைகளை வழங்கும் ஊழியர்களுக்கும் பல சிக்கல்களை ஏற்படுத்துகின்றது என்றும் அந்தச் சங்கம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (க-இ)

## வர்த்தகர்களின் முயற்சியால் நவீன சந்தை மீண்டும் திறப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.26

நகரசபைச் செயலாளரின் அறிவுறுத்தலில் பூட்டப்பட்டிருந்த பருத்தித்துறை நகரின் மத்தியில் அமைந்துள்ள நவீன சந்தைக் கட்டடத் தொகுதி, வர்த்தகர் சங்கத்தினர் தலையீட்டால் மீண்டும் திறக்கப்பட்டது.

பருத்தித்துறை நவீன சந்தைக் கட்டடத்தின் மேல் பகுதிக்குச் செல்லமுடியாதவாறு நேற்று முன்தினம் கதவுகள் பூட்டுப்போட்டு பூட்டப்பட்டிருந்தன. இதன்காரணமாக நிறுத்தல் அளவைக் கருவிகளைச் சரிபார்த்து முத்திரையிடும் பணியில் ஈடுபட்ட அலுவலர்கள் மற்றும் வியாபாரிகள் உள்ளே செல்ல முடியாத நிலை காணப்பட்டது.

குறித்த விடயம் பருத்தித்துறை வர்த்தகர் சங்க நிர்வாகத்தின் கவனத்துக் கொண்டுவரப்பட்ட நிலையில் காலை 10.30 மணியளவில் திறப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமைகளில் மீன், இறைச்சிக் கடைகள் மூடப்படும் நாள் என்பதால், குறித்த வியாபாரிகள் அன்றைய நாளில் தமது நிறுத்தல் கருவிகளைச் சரிபார்த்து முத்திரையிடுவதற்காக எடுத்து வந்து காத்திருக்கும் நிலை ஏற்பட்டிருந்தது. (க-100)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமாகச் செயற்படும் நாள். தந்தை வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். சகோதரர்கள் குடும்பம் தொடர்பான விஷயத்தில் உங்களிடம் ஆலோசனைகேட்டு வருவார்கள். சிலருக்கு அவ்வப்போது சிறுசிறு சலனங்கள் ஏற்பட்டுநீங்கும். மாலையில் பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

**இடபம்:** இன்றைக்கு புதிய முயற்சிகளைத் தவிர்த்து விடுவது நல்லது. சிலருக்கு நண்பர்கள் மூலம் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். தாய்வழி உறவினர்கள் மூலம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்கு ஒத்துழைப்புத் தருவார்.

**மிதுனம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். மனதுக்கு மகிழ்ச்சிதரும் சம்பவம் நடைபெறும். பிள்ளைகளின் உற்சாகம் உங்களையும் தொற்றிக்கொள்ளும். சகோதரர்கள் மூலம் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். தாயின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள்.

**கடகம்:** செலவுகள் அதிகரிக்கும் நாள். என்றாலும் தேவையான பணம் கையில் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். சிலருக்குத் தாய்வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். வாழ்க்கைத்துணைவழியில் மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். காரியங்கள் அனுகூலமாகும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் பொருள்சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. உங்கள் தேவையறிந்து நண்பர் செய்யும் உதவி மகிழ்ச்சிதரும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்தநாள். ஆனாலும் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். மற்றவர்களிடம் பேசும்போது நிதானம் அவசியம்.

**துலாம்:** உறவினர்கள் வருகையால் திடீர்ச் செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். சிலருக்கு வாழ்க்கைத்துணையின் மூலம் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உங்கள் முயற்சியில் எதிர்ப்புகளைக் கடந்து வெற்றிபெறுவீர்கள். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**விருச்சிகம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். தாயிடம் கேட்ட உதவி கிடைக்கும். உடல்நலனில் கவனம்தேவை. சிலருக்கு எதிர்பாராத செலவுகளுடன் தேவையற்ற அலைச்சலும் ஏற்படும். பிள்ளைகளால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**தனுசு:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. மூன்றாவது நபர்களின் தலையீடு காரணமாக கணவன் –மனைவிக்கிடையே பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால் ஒருவரையொருவர் அனுசரித்துச்செல்வது நல்லது.

**மகரம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றி பெறும். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி உறவினர்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கும்பம்:** இன்றைக்கு பதற்றம் தவிர்த்து எதிலும் நிதானமாகச் செயற்படவும். சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண் சச்சரவுகள் ஏற்படும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். புதிய முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தினர் உங்கள் யோசனைக்கு முக்கியத்துவம் தருவார்கள்.

# முப்பொன் விழா

யாழ்ப்பாணம், ஒக்.26

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் முப்பொன் விழா ஆய்வரங்கத் தொடக்க நிகழ்வு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30மணி தொடக்கம் 11மணி வரை இடம்பெறவுள்ளது.

இதன்போது ஆய்வரங்க மலர் வெளியீடு, சிறப்புப் பிரதிகள் வழங்கல் என்பன இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத் தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பி தலைமையுரையினையும், யாழ்.மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை பி.ஜே.ஜெபரட்ணம் மற்றும் இந்துக்குருமார் அமைப்பின் தலைவர் பிரம்மஸ்ரீ.கு.வை.கா. வைத்தீஸ்வரக் குருக்கள் ஆசியுரையையையும், யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் திருமதி சுபதினி ரமேஸ் வெளியீட்டுரையையும் வழங்குவர்.

அன்றையதினம் காலை 11மணி தொடக்கம் பி.ப.1.30மணி வரை ஆய்வரங்கு இடம்பெறும். தொர்டர்ந்து யாழ்ப்பாணம் பிரதான வீதி 286, கலைத்தூது கலையகத்தில் பி.ப.4மணி தொடக்கம் பி.ப. 7மணிவரை அரங்க நிகழ்ச்சி இடம்பெறும். ஆசியுரையை யாழ்.மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை, வாழ்த்துரையை யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கப் பெருந்தலைவர் வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ், யாழ்.அமலமரித்தியாகிகள் மாகாண முதல்வர் அருட்தந்தை போல் ஜெயந்தன் பச்சேக் அமதி ஆகியோர் வழங்குவர்.

இதன்போது பரிசளிப்பு, சான்றிதழ் வழங்கும் நிகழ்வு, அபிநயப்பாடல், பேச்சு, நடனம், நடன அளிக்கை என்பன இடம்பெறவுள்ள்ன. (ச-41-159)

# கட்டாக்காலிக் கால்நடைகள் பிடிபட்டால் ரூ. 2,500 தண்டம்

## பச்சிலைப்பள்ளியில் நடவடிக்கை

கிளிநொச்சி, ஒக்.25

பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபைக்குட்பட்ட முகமாலை தொடக்கம் ஆனையிறவு வரையிலான பிரதேசங்களில் கட்டாக்காலிக் கால்நடைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகப் பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை தவிசாளர் சுரேன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுப்போக்குவரத்து வீதிகளில் திரியும் கட்டாக்காலி கால்நடைகளைப் பிரதேசசபை உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் பிடித்து அகற்றும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பிடிக்கப்படும் ஒரு கால்நடைக்குத் தலா 2 ஆயிரத்து 500 ரூபா வ்ரையான தண்டப்பணத்தைச் செலுத்திய பின்னரே உரிமையாளர்கள் தமது கால்நடைகளைப் பெற்றுக்கொள்ளமுடியும். எனவே இந்த விடயத்தைக் கவனத்திற்கொண்டு தமது கால்நடைகளை பொதுப் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தாதவகையில் வளர்க்க வேண்டும் - என்றார். (ச-25, 27)



# மரக்கறி விலை திடீர் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.26

யாழ்.குடாநாட்டில் மரக்கறி வகைகளின் விலை திடீரென அதிகரித்துள்ளது.

கந்தசஷ்டி விரத காலம் மற்றும் சீரற்ற காலநிலை என்பவற்றால் அவற்றின் விலை எகிறியுள்ளது.

நேற்று திருநெல்வேலிச் சந்தையின் விலை நிலைவரப்படி,

கத்தரிக்காய் கிலோ 240 ரூபாவாகவும் பாவற்காய் கிலோ 500 ரூபாவாகவும் பயிற்றங்காய் கிலோ 600 ரூபாவாகவும் தக்காளி கிலோ 200 ரூபாவாகவும் கரட் கிலோ 250 ரூபாவாகவும் பூசணி கிலோ 100 ரூபாவாகவும் பச்சைமிளகாய் கிலோ 250 ரூபாவாகவும் கீரை ஒரு பிடி 160 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டன. (ச-17)



மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் ஐப்பசி வெள்ளியை முன்னிட்டு சிறப்புப் பூசை வழிபாடுகள் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன. தொடர்ந்து முருகப்பெருமான் வீதிவலம் வந்து அருட்காட்சியளித்தார். (ச-17)

# பொதுக்கலைமாணிப் பட்டம் பெற்ற யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தினர்

யாழ்ப்பாணம், ஒக்.26

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 29ஆவது பட்டமளிப்பு விழாவில் யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் அங்கத்தவர்களான வி.கவிதாஸ் அ.விமலதாஸ், தி.புஸ்பாகரன் ஆகியோர் பொதுக்கலைமாணிப் பட்டம் பெற்று பெருமைசேர்த்துள்ளார்கள்.

அதற்கமைய 49 வருடங்களாகப் பார்வையற்றவர்களுக்காகப் பணியாற்றிவரும் குறித்த நிறுவனத்தின் பட்டதாரிப்பட்டியல் இன்று 103 ஆக அதிகரித்துள்ளது. (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

கடினமான காரியங்களை சிறப்பாகச் செய்வதற்கு முயற்சி செய்வதன்மூலம் நீங்கள் புகழைச் சம்பாதிக்கிறீர்கள்.

— ஜெப் பெஸோஸ் —

# விழாக்கள் மருந்திடலாகாது...!

பாதிக்கப்பட்ட தரப்பையும், பாதிப்பை ஏற்படுத்தியவர்களையும் ஒரே மாதிரியாக அணுகுவது ஒருபோதும் 'அறத்தின் பாற்பட்ட' நீதிக்கான தேடலாக அமையாது. முரண்பாடுகளும் வஞ்சமும் உச்சம் பெற்றுள்ள இரு தரப்புகளிடையே நல்லிணக்கத்தையும், அமைதியையும் ஏற்படுத்துவது ஆகப்பெரும் நற்செயலாக உள்ளபோதிலும், அத்தகைய நல்லிணக்கத்தின் ஆரம்பப்புள்ளி பாதிக்கப்பட்ட தரப்பின் மனக் காயத்தை ஆற்றுப்படுத்துவதாகவே அமைய வேண்டும். அதைச் செய்யாததால் அல்லது செய்ய மறுத்ததால்தான் எட்டுப் போர்களை நிறுத்திய பின்னரும், அமைதிக்கான நோபல் அதிபர் ட்ரம்புக்குக் கிட்டாதிருக்கின்றது. இந்த விடயத்தில் மறைந்திருக்கும் சூட்சுமத்தை - நுணுக்கத்தை ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தெளிந்துகொள்ளவேண்டும்.

இலங்கையர்கள் அனைவரையும் ஒற்றிணைக்கவும், நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் ஏற்கனவே முன்னறிவிக்கப்பட்ட 'இலங்கையர் தினக் கொண்டாட்டங்களை' நடத்துவதற்கு செயலில் இறங்கியிருக்கின்றது அரசாங்கம். டிசெம்பர் மாதம் மத்திய பகுதியில் மூன்று நாங்கள் இந்தக் கொண்டாட்டங்களும், நிகழ்வுகளும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டதுடன், அவற்றுக்கான அனைத்துப் பொறுப்புகளும் பௌத்த சாசன அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஆக, 'இலங்கையில் போர்க் குற்றமே நிகழவில்லை' என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அறிவித்துவிட்டு, காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்துக்குத் தீர்வைக் காணாமல், தமிழர்களின் நிலங்களை படையினர் அபகரித்து வைத்திருக்கத் தக்கதாக 'இலங்கையராக ஒன்றிணைவோம் வா!' என்றிருக்கின்றது அரசாங்கம்.

காணாமற்போன மகனைத் தேடியலையும் தாயும், அரசியற் கைதிகள் என்ற பெயரில் சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் தமது உறவுகளை 'உயிருடன் காவுகொடுத்த' உறவுகளும் 'இலங்கையர் தினம்' தொடர்பான அழைப்பை எத்தகைய மனநிலையில் எதிர்கொள்வார்கள் என்ற குறைந்தபட்சப் புரிதல்கூட இந்த அரசாங்கத்திடம் இல்லை. ஜனாதிபதி அநுரவும், அவருடைய அரசாங்கத்தினரும் உண்மையிலேயே நடுநிலையானவர்கள் என்றால், அவர்கள் பாதிக்கப்பட்ட தமிழர்களின் நிலைப்பாட்டில் இருந்தே இந்த விழாக்கள் தொடர்பில் சிந்திக்கவும் செயற்படவும் வேண்டும். இதைத்தான், 'ஆபிரிக்காவின் நீதவான்' என்று அறியப்படும் பேராயர் டெஸ்மன்ட் டுட்டு 'அநீதியான சூழ்நிலையில் நடுநிலையாளனாக இருப்பதென்பது ஒடுக்குமுறையாளனின் பக்கம் நிற்பதாகும்' என்று கூறுகின்றார்.

இனப்பாகுபாடு இல்லாமல் அனைத்து மக்களையும் அரவணைப்பதற்கு அரசாங்கம் எடுத்த முயற்சி தவறானது அல்ல. ஆனால், அதற்கு முதல் செய்ய வேண்டிய பல கருமங்கள் செய்யப்படவில்லை. முதலில் காயப்பட்ட மனங்களுக்கு மருந்திடுங்கள். அரசியற் கைதியான தன் மகனுக்கு, ஒருவேளை சோறு ஊட்டிவிடுவதில் அந்தத் தாய் அடையும் இன்பத்தை உங்களின் எந்த விழாக்களும் வழங்கப்போவதில்லை.




# இலங்கையில் திருமணங்கள் வீழ்ச்சி



கொழும்பு, ஒக்.26
இலங்கையில் கடந்த 2024ஆம் ஆண்டில் திருமணங்கள் குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துள்ளதாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரவியல் தரவுகள் தெரிவித்துள்ளன.
2024ஆம் ஆண்டில் மொத்தம் 139,290 திருமணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இது 2023 ஆம் ஆண்டை விட 8 சதவீதம் குறைவு என்று தரவு காட்டுகிறது.
முன்னதாக, பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட 2022 ஆம் ஆண்டில் நாடுமுழுவதும் 171,140 திருமணங்கள் பதிவு செய்யப்பட்டன.
இதேவேளை பிறப்பு வீதத்திலும் கூர்மையான சரிவு ஏற்பட்டுள்ளது. புள்ளிவிவரங்களின்படி, 2020 இல் 301,706 உடன் ஒப்பிடும்போது 2024 இல் 220,761 பிறப்புகள் பதிவாகியுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# நவம்பர் 10 இல் உயர்தரப் பரீட்சை

கொழும்பு, ஒக்.26
2025ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை நவம்பர் 10 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் எனப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.
அதன்படி நவம்பர் 10ஆம் திகதி முதல் டிசெம்பர் 5ஆம் திகதி வரை 2362 பரீட்சை மையங்களில் பரீட்சை நடைபெறும். இதேவேளை, பொதுத் தகவல் தொழில்நுட்பப் பரீட்சை டிசெம்பர் 6 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)




# வெடிமருந்துகளுடன் சந்தேகநபர் கைது!



கொழும்பு, ஒக்.26
மினுவாங்கொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்பகஹவத்த பகுதியில் வெடிமருந்துகளுடன் சந்தேகநபர் ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.
சந்தேகநபர் மினுவாங்கொட அம்பகஹவத்த பகுதியைச் சேர்ந்த 53 வயதுடையவர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ச-இ)

# நஷ்டத்தில் எயார்லைன்ஸ்

கொழும்பு, ஒக்.26
2024/25 ஆம் நிதியாண்டில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்கு 2,735 மில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.
ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவன மானது, 2023/24 ஆம் நிதியாண்டில் 7,925 மில்லியன் ரூபா இலாபத்தை ஈட்டியுள்ளது. அதன்படி, 2023/24 ஆம் நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் 2024/25 ஆம் நிதியாண்டில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்கு அதிகளவு நஷ்டம் ஏற்பட்டுள்ளது. அந்நியச் செலாவணி இலாபம் குறைந்ததே இதற்குக் காரணம் என ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது. (ச-இ)

# மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, ஒக்.26
இலங்கையில் நிலவும் சீரற்ற காலநிலையால் சில மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும் என்று தேசிய கட்ட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. அதன்படி, கொழும்பு, களுத்துறை, காலி, கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தளை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு இந்த விடுக்கப்பட்டுள்ளது. (ச)

நாளை
திங்கட்கிழமை - ஐப்பசி 10
27.10.2025
சுபநேரம் : 12.03 - 01.33
ராகுகாலம் : 07.33 - 09.03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்றிறன்மிக்க வழிமுறைகளில் வரிச்சீரமைப்பு ஏற்படுத்தவேண்டும்

UNHRC

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவிப்பு

**கொழும்பு, ஒக்.26**

**கல்வி உள்ளடங்கலாக இலங்கையர்களின் சமூக மற்றும் பொருளாதார உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு செயற்றிறன்மிக்க வழிமுறைகள் ஊடாக வருமானத்தை அதிகரிப்பதற்கு ஏதுவான வரி மறுசீரமைப்புகளை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது. இலங்கையின் வரிக்கட்டமைப்புத் தொடர்பாக கடந்த வாரம் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

2010ஆம் ஆண்டளவிலே மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2 சதவீதமாகக் காணப்பட்ட கல்விக்கான செலவினங்கள், 2022ஆம் ஆண்டு 1.5 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. 2019ஆம் ஆண்டு அரசாங்கத்தின் சிரேஷ்ட அதிகாரிகளால் நடைமுறைப்படுத்தப்பட்ட கட்டுமீறிய அளவிலான வரிச்சலுகை வழங்கல் தீர்மானத்தின் விளைவுகள் 2022ஆம் ஆண்டு தீவிர பொருளாதார நெருக்கடிக்கு வழிகோலின. அதன்பின்னர் நடைபெற்ற தேர்தல்கள்மூலம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான புதிய அரசாங்கம் தெரிவுசெய்யப்பட்டது. புதிய பொருளாதாரக் கட்டமைப்பை உருவாக்குவதில் இலங்கையர்கள் தெளிவாக இருப்பதை அது காண்பித்தது. அரசாங்கம் சில நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள போதும், தற்போதைய மறுசீரமைப்புகள் இந்த நெருக்கடியின் ஆணிவேரைக் களைவதற்குப் போதுமானவையன்று.

இந்தப் பிரச்சினைக்கான அடிப்படை பல தசாப்தங்களுக்கு முன்னரே உருவாகியிருப்பதை நாம் கண்டறிந்துள்ளோம். 1970ஆண்டுகளின் பிற்பகுதியில் இலங்கை ஒரு பொருளாதார நிலைமாற்றத்தை நோக்கி நகர்ந்தது. பெருநிறுவனங்களுக்கும் தனவந்தர்களுக்கும் சாதகமாக அமைந்த, குறைந்தளவு வருமானத்தையே ஈட்டித்தந்த வரிக்கொள்கைகளும் அதில் உள்ளடங்குகின்றன. இவை 2022ஆம் ஆண்டு தீவிரமடைந்த பொருளாதார நெருக்கடிக்கு வித்திட்டன.

தற்போது கல்வி உள்ளடங்கலாக இலங்கையர்களின் சமூக மற்றும் பொருளாதார உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு செயற்றிறன்மிக்க வழிமுறைகள் ஊடாக வருமானத்தை அதிகரிப்பதற்கு ஏதுவான வரி மறுசீரமைப்புகளை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும். இது மனித உரிமைகளை மையப்படுத்திய பொருளாதாரக் கட்டமைப்பைக் கட்டியெழுப்பவேண்டிய தருணமாகும்- என்றுள்ளது. (எ-இ)



# ரயிலில் தீ விபத்து


அநுராதபுரம், ஒக்.26

அநுராதபுரத்திலிருந்து புறப்படவிருந்த ரஜரட்ட தொடருந்தில் நேற்றுத் தீ விபத்து ஏற்பட்டது.

நேற்று காலை அநுராதபுரத்திலிருந்து புறப்படவிருந்த ரஜரட்ட தொடருந்தில் இந்தத் தீ விபத்து ஏற்பட்டது.

ரயிலின் இயந்திரத்தில் தீ விபத்து ஏற்பட்டதாகவும், தீவிபத்துக்கான காரணம் இன்னமும் கண்டறியப்படவில்லை என்றும் ரயில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ரயிலை மீண்டும் அநுராதபுர ரயில் நிலையத்துக்குக் கொண்டுசென்று தொடருந்தில் மற்றொரு எஞ்சின் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)



# அனர்த்த முகாமைத்துவம் மன்னாரில்கலந்துரையாடல்

மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவக் குழுக்கூட்டம் மாவட்டச்செயலர் க.கனகேஸ்வரன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. இதன்போது, வடகீழ் பருவப்பெயர்ச்சி மழைக்காலத்தில் மன்னாரில் ஏற்படக்கூடிய அனர்த்தங்களுக்கான முன்னாயத்த நடவடிக்கைகள், வெள்ள நிலைமையின்போது மக்கள் இடம்பெயர்ந்து தங்குவதற்கான தற்காலிக பாதுகாப்பு நிலையங்கள், குளங்கள், ஆறுகளில் ஏற்படும் திடீர் வெள்ளப்பெருக்கைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டது. கூட்டத்தில் மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் கே.திலீபன், திணைக்களத் தலைவர்கள், முப்படையினர், உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-25, 56,40)

# கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டு விழா

கிளிநொச்சி, ஒக். 26

வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன், கிளிநொச்சி மாவட்டச் செயலகம் மற்றும் மாவட்டப் பண்பாட்டுப் பேரவை ஆகியவற்றின் இணை ஏற்பாட்டில் பண்பாட்டுப் பெருவிழா கிளிநொச்சி மாவட்டச் செயலர் சு.முரளிதரன் தலைமையில், இரணைமடு தாமரைத்தடாக மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் விருந்தினர்களாக கடற்றொழில் அமைச்சர் இரா. சந்திரசேகர், வடமாகாண ஆளுநர் நா. வேதநாயகன் ஆகியோர் கலந்துகொண்டனர். இதன்போது, தமிழமுதம் அமைப்பின் ஏற்பாட்டில், 46 ஆயிரம் தமிழ்ப்பெயர்கள் அடங்கிய நூல் வெளியிட்டு வைக்கப்பட்டதுடன், கலைஞர்கள், ஆலயங்களின் வரலாறுகளை உள்ளடக்கி மாவட்டச் செயலக இணையத்தளமும் ஆரம்பித்துவைக்கப்பட்டது. (ச-25,113)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீத்தார் பெருமை
# 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
01 • 07 • 1926

உதிர்வு
25 • 09 • 2025

## திருமதி சுந்தராம்பிகை சிவநாராயணமூர்த்தி
## (Moorthy Teacher)

ஓய்வு நிலை ஆசிரியர் யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி

**தென்மராட்சியின் கல்வியில் கலங்கரை விளக்காக ஒளிரும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கல்வி வரலாற்றில் முத்திரை பதித்த ஆசிரியர் வரிசையில் இடம்பெறும் பெருமைக்குரியவர் அண்மையில் அமரத்துவம் அடைந்த எங்கள் அன்பான ஆசிரியர் திருமதி சுந்தராம்பிகை சிவநாராயணமூர்த்திதி (Moorthy Teacher)**

இவர் கொக்குவிலைப் பிறந்த அகமாகவும், தாமோதரம்பிள்ளை வீதி சங்கத்தானையைப் புகுந்த வீடாகவும் கொண்டவர். இவரது துணைவர் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் நிறுவுநர் தாமோதரம்பிள்ளை அவர்களின் மகள் வழிப் பேரனாவார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இத்தகைய பின்புலத்தைக் கொண்ட அமரர் அவர்கள் யா/சாவகச்சேரி .இந்துக் கல்லூரியில் ஒரு நீண்ட காலம் அதாவது (1954 – 1981) 27 வருடங்களாக அளப்பரிய சேவை ஆற்றியவர். தனது சீரிய பணிகளால் இந்துவை ஏற்றம் பெற வைத்த கல்வித் தாயாக விளங்குகிறார்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து இன்று வானுறையும் தெய்வமாகி விட்ட திருமதி சிவநாராயணமூர்த்தி அவர்கள் தனது கனதியான கல்விப் பணியினால் எண்ணற்ற மாணவர்களை ஏற்றம் பெற வைத்தவர். அவர்கள் வாழ்வின் உயர்வு கண்டு உள்ளம் குளிர்ந்தவர். சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் க.பொ.த உயர்தர வகுப்பில் வரலாறு. அரசறிவியல் என்னும் பாடங்களைச் செம்மையாகப் போதித்து கலைப்பிரிவு உச்சம் தொடும் உயர் சித்திகளை பெற வைத்த பெருமைக்குரியவர். இவரது காலத்தில் இந்துக் கல்லூரியில் இவரது மாணவர்கள் எவருமே எந்தவித தனியார் வகுப்புக்களையும் அறியவே மாட்டார்கள். இன்று தனியார் வகுப்புக்கள் எங்கே. எங்கள் ஆசிரியையின் அர்ப்பணிப்பான அக்கால சேவை எங்கே என்று எண்ணும் போது பெருமையாக இருக்கிறது. விடுமுறைக் காலங்களில் கூட மேலதிக இலவச வகுப்புக்களை நடாத்தி மாணவர்களை வாழ்க்கைக்கும் பரீட்சைக்கும் தேர்ச்சியடைய முனைப்புடன் செயற்பட்ட செம்மல். கடமையைக் கண்ணாகவும் சேவையை உயிர் மூச்சாகவும் கொண்டவர். சிந்தனை. சொல். செயல் மூன்றும் ஒன்றுபட வாழ்ந்தவர். தோற்றத்தில் எளிமையானவராக ஆரவாரமின்றி அமைதியாக இருந்து காத்திரமான கல்விப் பணிகளை ஆற்றியவர்.

இவரது சேவைக்காலம் இந்துக் கல்லூரியின் ஒரு பொற்காலம் எனலாம். இவரது சேவைக் காலத்தில் 1970 இல் கலைப் பிரிவில் 17 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி 17 மாணவர்களும் பல்கலைக்கழகம் செல்லும் பேற்றினைப் பெற்று வரலாறு படைத்தவர். இதனால் கல்லூரியின் சாதனை தென்மராட்சியில் மட்டுமல்ல நாடு முழுவதும் பேசுபொருளானது. ஏழ்மை ஒரு மாணவனது முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கக் கூடாது ஏழ்மையுடனே திறமையும் இருக்கும் என்பதை இனங்கண்டு தனது தன்னலம் கருதாத அர்ப்பணிப்பான சேவையால் மாணவர் மனங்களை வென்றவர். வகுப்பறைக்குள் ஆசிரியை நுழைந்து பாடம் தொடங்கி விட்டால் மாணவர் அனைவரும் சித்திரப்பாவைகளாக மாறிவிடுவர். தண்டனைக்குப் பயந்தல்ல மாணவர் வளர்ச்சியில் அவர் காட்டும் சிரத்தையை அன்றைய மாணவர்கள் உணர்ந்தமையே யாகும். அன்னாரது அர்ப்பணிப்பும் உயர் சித்திகளும் அயற் பாடசாலைகளின் மாணவர்கள் இந்துக் கல்லூரியை நோக்கி படையெடுக்க வைத்தமையும் குறிப்பிடத்தக்கது. இந்துக் கல்லூரி பல சாதனைகளை ஈட்டி இன்று தேசிய கல்லூரியாக மிளிர்வதற்கு அமரரின் பங்களிப்பு காத்திரமானது.

மேலும் கல்லூரி மாணவர்கள் கற்றலோடு சிறந்த ஒழுக்க விழுமியங்களையும் உடையவர்களாக உருவாக வேண்டும் என்ற உயரிய நோக்கில் பாடசாலையில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெறும் 'நற்சிந்தனை' வழங்கும் நிகழ்வில் ஆசிரியையின் பங்களிப்பு உன்னதமானது எனலாம். தமிழில் சிறந்த ஆளுமையும் பேச்சாற்றலும் கொண்ட பேராசான். இவர் கற்றல் கற்பித்தலோடு தன்னை மட்டுப்படுத்தாது இணைபாடவிதான செயற்பாடுகளிலும் முன்னின்று செயற்பட்டவர். க.பொ.த உயர்தர மாணவர் மன்றத்தின் போஷகராக இருந்து மாணவரை வழிப்படுத்தியவர். பாடசாலைகளுக்கிடையே நடைபெறும் விவாதப் போட்டிகள். பேச்சுப் போட்டிகளில் மாணவர்களைப் பயிற்றுவித்து சிறந்த இடங்களை மாணவர் பெறுவதற்கும் கல்லூரியின் புகழ் உயர்வதற்கும் வழிசமைத்தவர்.

மேலும் கல்லூரியின் ஒழுக்காற்றுச் சபை உறுப்பினராக இருந்து கல்லூரியில் நல்ல பண்பு நிறைந்த மாணவ சமுதாயத்தை உருவாக்கியவர். கண்டிப்பும் கருணையும் ஒருங்கே கொண்டு மாணவ உலகத்தில் பெரு விருப்புக்குரிய புகழ்பூத்த ஆசிரியராக மாணவர் உள்ளங்களை வென்ற ஒரு அன்பு அன்னையாக விளங்கினார். இவரால் உருவாக்கப்பட்ட மாணவ மாணவிகள் இலங்கையின் வெவ்வேறு பல்கலைக் கழகங்களில் விரிவுரையாளர்களாக. பேராசிரியர்களாக. பாடசாலை அதிபர்களாக இன்னும் பல்வேறு பதவி நிலைகளில் பணியாற்றி தமது ஆசானின் பெருமைகளைப் பறைசாற்றி நிற்கின்றனர். இவரால் உருவாக்கப்பட்ட மாணவர்கள் தமக்கு கல்வியூட்டிய ஆசானுக்கு நன்றி நவிலும் முகமாக 2000 ஆம் ஆண்டு முற்பகுதியில் "சிவநாராயணமூர்த்தி புலமைப்பரிசில்" நிதியம் ஒன்றை கல்லூரியில் ஆரம்பித்து வைத்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

**"தக்கார் தகவிலர் என்பது அவரவர்**
**எச்சத்தால் உணரப்படும்"**

என்ற வள்ளுவர் வாக்குக்கு ஏற்ப அன்னாரது எச்சங்களாக விளங்கும் பிள்ளைகள் நால்வரும் விஞ்ஞானப் பட்டதாரிகளாக விளங்குகின்றனர். மூத்த மகளான சிவமங்கை (விவசாய விஞ்ஞானம்). ரேணுகாதேவி (மருத்துவர்). கிரிதா (மருத்துவர்). சிவோத்தமன் (விரிவுரையாளர்) இவர்களின் வாழ்க்கைத் துணைகளான க.கைலாசநாதன். வே.வேல்முருகையா. வி.விபுலானந்தன். சி.சுதர்சினி ஆகியோரும் கல்விப் புலம்சார்ந்தோரேயாவார். வம்சவிருத்தியைப் பொறுத்தவரை பேரப்பிள்ளைகளாக வாகீஷயன். லஷ்சனா. ஹரிதரன். ரம்யா. கீதாஞ்சலி. நிரோஷா. நீட். யாழினி. பிரசாந். சத்தியா ஆகியோரையும் பூட்டப் பிள்ளைகளாக ஜெய் என்பவரையும் பெற்று இல்லறத்தில் ஒரு நிறைவான வாழ்வை வாழ்ந்தவர்.

அமரர் அவர்களின் இழப்பு அவர் வழிவந்த கல்விச் சமூகத்திற்கு பேரிழப்பாகும். அன்னாரின் இழப்பினால் துயருற்று இருக்கும் அவரது பிள்ளைகள். பேரப்பிள்ளைகள். உறவினர்களின் துயரில் நாமும் பங்குகொண்டு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**"மன்னரும் மாமுனிவரும் மகத்தாக வாழ்ந்தோரும்**
**எண்ணரும் சேவைகள் செய்தோரும்**
**மண்ணிலே ஒருநாள் மரணிப்பர்"**

என்ற தத்துவத்தை உணர்ந்து மனம் தேறி தென்மராட்சியில் ஒரு கல்வியியலாளர் பரம்பரை உருவாக வித்திட்ட ஆசானுக்கு சிரந்தாழ்த்தி கரம் கூப்பி எமது இதயபூர்வமான அஞ்சலிகளைச் சமர்ப்பிக்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!!

**அமரரின் அன்புக்குரிய மாணவர்கள்**
**சாவகச்சேரி இந்துக் கல்லூரி,**
**சாவகச்சேரி.**

(CS/59678) J-1

# பாடசாலை நேரம் நீடிக்கும் அரசின் முடிவுக்கு எதிர்ப்பு

கல்விச் சீர்திருத்தங்களின்கீழ், 2026 ஆம் ஆண்டு முதல் பாடசாலை நேரத்தை 30 நிமிடங்கள் நீடிக்கும் அரசாங்கத்தின் முடிவுக்கு ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் தொழிற்சங்கக் கூட்டணி கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தெரிவிக்கையில், கல்வியாளர்களுடன் முறையான ஆலோசனை இல்லாமல் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. நீடிக்கப்பட்ட நேரம் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இருவருக்கும் கூடுதல் சுமையை ஏற்படுத்தும்.

ஆசிரியர்களின் பிரச்சினைகளைத் தொடர்ந்து புறக்கணிப்பது கல்வித்துறையில் பரந்த தொழிற்சங்க நடவடிக்கைக்கு வழிவகுக்கும். இந்த நடவடிக்கையை மறுபரிசீலனை செய்து, தொடர்புடையவர் களுடன் கல்வி அமைச்சு கலந்துரையாட வேண்டும். எதிர்வரும் நவம்பர் 7 ஆம் திகதிக்கு முன்னர் அதிகாரிகள் இந்த முடிவைத் திருத்தத் தவறினால் பாடசாலைப் பருவத்தின் தொடக்கத்தில் ஒரு நாள் வேலை நிறுத்தத்தைத் தொடங்குவோம் – என்றனர்.

(க–இ)

**வேலையாட்கள் தேவை**

நியூமருதம் சைவ
உணவகத்திற்கு சமையலாளர்,
சமையல் உதவியாளர் தேவை

தொடர்பு: 075 144 3303
076 848 6077

**விற்பனைக்கு**

தனங்களப்பு - மன்னார் வீதியில் அமைந்துள்ள சகல வசதியும்
கொண்ட வீடு மற்றும் காய்க்கும் தென்னைகள் நிறைந்த
60 பரப்பு தென்னந்தோட்டம் விற்பனைக்கு.
பகுதி பகுதியாகவும் விற்கப்படும். விலை பேசித் தீர்மானிக்கலாம்.

076 211 1267, 077 633 6059

**திருநெல்வேலி காணி விற்பனைக்கு**

பரப்பு - 02, 2 1/2, 01
மக்கள் வங்கி - 100 மீற்றர்
பலாலி வீதி - 75 மீற்றர்
தொடர்புகளுக்கு:-
077 253 2575

**விற்பனைக்கு**

உடற்பயிற்சி இயந்திரம்
மற்றும் வீட்டுப்
பாவனைக்குரிய சிசில்
குளிர்சாதனப்பெட்டி
என்பன
விற்பனைக்குண்டு



தொடர்புகளுக்கு:
077 662 5743, 077 658 9694

(CS 30603) E

**Jaffna College - Vaddukoddai**
**Admissions Grade 6 - 2026**

Jaffna College is a prestigious and long standing private school in Vaddukoddai, Sri Lanka

Vacancies exist for both Tamil and Bilingual classes.

Application forms could be collected after Monday 27th October from the welfare office during school hours.

Principal

(CS/46157) J-1

**மணமகன் தேவை**

1995 ஆம் ஆண்டு பிறந்த புரட்டாதி நட்சத்திரம்
கும்பராசியுடைய கனடாவில் வசிக்கும் தமது
பட்டதாரி உயர்குல மகளுக்கு UK, கனடா,
அவுஸ்ரேலியா, அமெரிக்கா நாடுகளில் PR உள்ள
மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்புகளுக்கு:
076 722 9136, 077 933 1648

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26.10.2025 ஞாயிற்றுக்கிழமை

# யாழ். பல்கலையில் மூவருக்கு தேசிய விவசாய ஆராய்ச்சி விருது

கொழும்பு, ஒக்.26

தேசிய விவசாய ஆராய்ச்சி சிறப்பு விருது யாழ்.பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மூவருக்கு வழங்கிக் கௌரவிக்கப் பட்டுள்ளது.

கொழும்பு - தேசிய விவசாய ஆராய்ச்சி சிறப்பு விருது வழங்கும் விழா ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் கடந்த வியாழக்கிழமை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதில் வனவியல் மற்றும் ஏற்றுமதி விவசாயப்பயிர்கள், பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை, மலர் வளர்ப்பு உள்ளிட்ட பெருந்தோட்டம் அல்லாத பயிர்ச்செய்கை, கால்நடை வளங் கள், மீன்வளர்ப்பு மற்றும் நீர்வாழ் வளங்கள் என மூன்று பிரதான பிரிவுகளில் சிறந்த ஆராய்ச்சியாளர் களுக்கு தேசிய விவசாய ஆராய்ச்சி சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டன.

அதன்படி இம்முறை ஆராய்ச்சியாளர்களுக்கான சிறப்பு விருது, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தாவரவியல் துறை யின் முன்னாள் தலைவர் பேராசிரியர் ஈ.சி. ஜெயசீலன், சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தர்மிலா ஜெயசீலன் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சுவந்தினி தெரின்ஷன் ஆகியோருக்கு வழங்கி வைக்கப்பட்டன. (ச)

# சுற்றிவளைப்பு; 3,553 பேர் கைது

கொழும்பு, ஒக்.26

நாடளாவிய ரீதியில் கடந்த 17 ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றி வளைப்பு நடவடிக்கையின்போது போதைப் பொருள்களுடன் 3,553 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊட கப் பிரிவு தெரிவித்துள்ளது. பொலிஸ் அதிகாரிகள், இராணுவ வீரர்கள், பொலிஸ் விசேட அதிரடிப்ப டையினர் மற்றும் கடற்படையினர் ஆகியோர் இணைந்து இந்தச் சுற்றிவளைப்பு நட வடிக்கையை மேற்கொண்டுள்ள னர். (ச-இ)


காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இருபாலை கிழக்கு அரசடிச் சந்தி Foodcity அருகாமையில் 4 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தென்னை, பனை, மாமரம், புளி, விளாமரங்களும் உண்டு. தரகர் தேவையில்லை. தேவையானவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும்

(CS 46174) E

தொடர்பு: 011 273 2311

அரசாங்கத் திட்டமொன்றிற்காக

யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி

ஆகிய பிரதேசங்களில் Bolero Cab வாகன சாரதியுடனும்

(பின்புறத்தில் Canopy மற்றும் இருக்கைகள் அவசியம்)

நவீன Double Cab வாகன சாரதி இன்றியும் தேவை.

சிலாபத்தை அண்மித்த பகுதியில் Crew Cab வாகன சாரதியுடன் தேவை.

071 3131 191 (சிங்கள மொழி)

077 7273 802 (தமிழ் மொழி)

வீடு வாடகைக்கு தேவை

யாழ் நகரை அண்மித்த பகுதிகளில் சிறிய குடும்பத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை

(CS 59723) E

தொடர்புகளுக்கு:

077 036 5768


# Invitation for Bids

01. The Chairman, Regional Procurement Committee invites sealed bids from contractors capable of continuously providing following supply services to the Teaching Hospital, Jaffna for the years 2025/2026.

02. Interested parties may obtain bid documents from the Procurement Division of Teaching Hospital, Jaffna by submitting a written request along with a copy of their National Identity Card and the receipt obtained after paying the bid document fee, as indicated in the table below, to the Shroff Section of Teaching Hospital, Jaffna. Documents can be collected during normal working days from 9:00 AM to 4:00 PM, between 2025-October -27 (Monday) and 2025- November-17 (Monday).

| # | Procurement | Bid Document Fee Value (Rs) | Bid Security Value (Rs) |
|---|---|---|---|
| 01 | Provision of Laundry Services - 2025/2026 | 3,000.00 | 200,000.00 |
| 02 | Supply of Raw Food Material of Fresh Vegetables & Fruits | 3000.00 | 200,000.00 |
| 03 | Supply of Raw Food Material of Meat, Egg & Cow Milk | 3000.00 | 100,000.00 |
| 4 | Supply of Bakery & Packed Foods | 3000.00 | 100,000.00 |

03. The following essential qualifications must be fulfilled for the "Provision of Laundry" Services contract.

I. Registration certificate issued by the Divisional Secretary of the relevant area for government approved community organizations.

II. A certified copy of either the Divisional Secretary's certificate confirming the operation of a laundry, drying, and ironing business, or the company registration certificate from the Registrar of Companies.

III. A certificate confirming that the applicant hospital possesses adequate laundry drying facilities commensurate with the volume of linen to be processed.

IV. Certificate of suitability for the laundry and drying facilities, issued by the Medical Officer of Health responsible for the area where the laundry and drying facilities are located.

V. A certificate detailing approximately two (02) years of prior service experience. (For applica tions pertaining to teaching hospitals and general hospitals, a certificate or certificates of experience obtained from a government, semi-government, or private institution/institutions that process more than 500 pieces of laundry per month must be submitted.) The Procure ment Board reserves the discretion to consider awarding this contract to a novice applicant who fulfills all other qualifications but lacks service experience, provided they furnish a 10% performance guarantee.

VI. Environmental Clearance issued by the Central Environmental Authority.

VII. Registration certificate under Clause 8 of the Public Contracts Act.

4. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the Director, Teaching Hospital, Jaffna at the above address during 09.00 am to 16:00 hours on any working day from 2025-October -27 (Monday), until 2025-November -17 (Monday). upon payment of a non-refundable fee of Sri Lankan Rupees three Thousand (Rs. 3,000.00). The method of payment will be cash & should be made at the shroff of the Hospital.

5. The bidders shall also register themselves with the Registrar of Public Contracts, Sri Lanka in terms of the Public Contract Act No. 03 of 1987 and the Certificate of Registration or payment receipt shall be submitted along with the bid.

6. Bids must be delivered to the address below at or before 10:00 am on 2025- November -18 (Tuesday), when bids will be opened in the presence of the bidders' representatives who choose to attend in person at the address below; late bids will be rejected. Bidding document Should be in A4 size & Should be spiral binding/Perfect binding (Glued spine like paperback books)

7. All bids shall be accompanied by a Bid-Security in favour of the Director, Teaching Hospital - Jaffna. Acceptable Bid Security details & Bid validity period is as per the Bidding Document.

8. The Chairman reserves the right to reject any or all Bids and the right to accept any portion of a bid, at any time prior to awarding of a contract without giving any reasons for such. Client is not bound to accept the lowest or any bids. Procurement Committee will not be responsible for any costs or any expenses incurred by the Bidders in connection with the preparation or delivery of Bids.

Chairman

Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna.


வகுப்புக்கள் நடாத்தப்படும்

உயர்தர மாணவர்களுக்கான Combined Maths Group / Individual Classess நடாத்தப்படும்.

Engineer / Lecturer (PG Dip, B.Sc - University of Peradeinya)

Covering Area - Jaffna District

(CS 59725) E

contact Information : 076 886 0510



ஈழத்து கைலாய ஜோதிட நிலையம்

இந்தியாவில் ஆன்மீகத்துறையில் 10 வருடங்களாக புகழ்பெற்ற

அம்மன் அருள் வாக்கு

- கல்வியில் முன்னேற்றம் இல்லையா ?
- குழந்தைப் பாக்கியம் கை கூடவில்லையா?
- கணவன் - மனைவி பிணக்கா ?
- பிரிவால் வேதனையா? தொழில் பிரச்சினையா?
- வாழ்வில் முன்னேற்றம் இல்லையா?
- மாங்கல்ய பாக்கியம் கை கூடவில்லையா?
- வெளிநாடு செல்லத் தடையா?
- அடிக்கடி நோய் ஏற்படுகின்றதா?
- மனதில் நிம்மதி இல்லையா?
- வாழ்வில் நிம்மதி இல்லையா?



அனைத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

இல. 20/16, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.

(முன் அனுமதி பெற்றுக்கொள்ளவும்.)

தொடர்புகளுக்கு :- 077 281 1234





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலைக்கழக நூலகத்துக்கு நூல்கள்


யாழ்ப்பாண வர்த்தகத் தொழிற்துறை மன்றம் (CCIY)
மற்றும் தேசிய தொழில்முயற்சி அதிகார சபை(NEDA)
இணைந்து பெருமையுடன் வழங்கும்

வடமாகாண
தொழில் முனைவோர் விருதுகள் 2025

விண்ணப்ப முடிவுத்திகதி 10-11-2025 வரை
நீடிக்கப்பட்டுள்ளது

NEDA CCIY Unity is Strength

வடமாகாண தொழில்முனைவோர் விருதுகள்-2025 இல் பெண் தொழில்முனைவோர், இளம் தொழில்முனைவோர், வேளாண்மை, உணவு சார் உற்பத்திகள், சுகாதாரம், தகவல் தொழில்நுட்பம், சுற்றுலா, மீன்பிடி, கல்வி, ஏற்றுமதிகள், கட்டிட நிர்மாணம் மற்றும் உட்கட்டமைப்பு, கைவினை மற்றும் படைப்புத் துறை உள்ளிட்ட பிரிவுகளில் விருதுகள் வழங்கப்படவுள்ளன.

மேலதிக விபரங்களுக்கு

யாழ்ப்பாண வர்த்தகத் தொழிற்துறை மன்றம் (CCIY)
இல -63, நல்லூர் குறுக்கு வீதி , நல்லூர் , யாழ்ப்பாணம்.
021 222 6608 / 070 366 3603


யாழ்ப்பாணம்,ஒக்.26
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசறிவியற்துறைத் தலைவர் கலாநிதி. தி.விக்னேஸ்வரனின் பிறந்தநாளை முன்னிட்டு, அரசறிவியற்துறை மூன்றாம் வருட, சிறப்புக்கலை மாணவர்களால் (44 ஆவது அணி மாணவர்கள்) பல்கலைக்கழக நூலகத்துக்கு, ஒரு தொகுதி நூல்கள் நேற்று அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

புத்தக வாசிப்புக் கலாசாரத்தை மாணவ சமூகத்தில் ஊக்குவிக்கவேண்டுமென்ற நோக்குடனேயே நூல்களைக் கையளித்தோம் என்று மாணவர்கள் தெரிவித்தனர். (க-66)



## ஒன்றுடன் ஒன்று மோதி 3 வாகனங்கள் விபத்து
### ஒருவர் படுகாயம்



யாழ்ப்பாணம், ஒக்.26
கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோப்பாய் சந்தியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தனியார் பேருந்து, ஹைஏஸ் ரக வாகனம் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன ஒன்றுடன் ஒன்று மோதியதில் இந்த விபத்துச் சம்பவித்தது. விபத்துத் தொடர்பில் இருவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (ச-27)

## மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 08 . 1950



மறைவு 24 . 10 . 2025

### கெங்காதரம்பிள்ளை சொர்ணபூபதி

மீசாலை வடக்கு, மீசாலையை பிறப்பிடமாகவும் கோண்டாவில், மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட கெங்காதரம்பிள்ளை சொர்ணபூபதி அவர்கள் கடந்த 24.10.2025 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் மாணிக்கம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கெங்காதரம்பிள்ளையின் (கங்கா போட்டோ- கோண்டாவில், மீசாலை) அன்பு மனைவியும், பிரகாஸின் (கங்கா போட்டோ, கோண்டாவில்) பாசமிகு தாயாரும், வினோஜாவின் மாமியாரும், பிரவீன், நிருசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் புவனேஸ்வரியின் பெறாமகளும், நிர்மலநாதன், காலஞ்சென்ற அருந்ததி (திருகோணமலை) ஆகியோரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான சொர்ணமலர், கமலாம்பிகை மற்றும் சொர்ணறஞ்சினி (ஜேர்மன்), மகாதேவன் (ஆதவன் ஸ்ரூடியோ, புத்தூர் சந்தி), சிவரகுநாதன் (சுவிஸ்), சர்வாஜினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம், பச்சிளைப்பள்ளி), இன்பராஜ் (ஜெகன்) ஆகியோரின் சகோதரியும், வன்னியசிங்கம், பரமநாதன் (ஜெர்மன்), அஜந்தா (சுவிஸ்), விநாயகலிங்கம், அமராவதி, காலஞ்சென்றவர்களான கோபாலா, நெல்லிநாதன், வீரபத்திரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.10.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மீசாலை வடக்கு,
மீசாலை.

தகவல்
கெ.பிரகாஸ் (மகன்)
(கங்கா போட்டோ)
கோண்டாவில், மீசாலை.

CR 46175) A

## மரண அறிவித்தல்



தோற்றம் 22.12.1937

மறைவு 24.10.2025

### கந்தையா சிவகுரு

சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவகுரு அவர்கள் நேற்று முன்தினம் 24.10.2025 (வெள்ளி) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - நல்லபிள்ளை தம்பதியரின் மகனும் சிவபாதம், சிவஞானதேவி, சிவரூபராணி, காலஞ்சென்றவர்களான கதிர்காமு, சீவரத்தினம், சிவலிங்கம், சிவஞானசுந்தரம், திருமதி. நேசமணி செல்வரத்தினம், திருமதி. சிவபதி இராஜதுரை ஆகியோரின் அன்பு சகோதரனும் இராசபூபதியின் அன்பு கணவரும் ஜெகஜீவன் (ஆசிரியர் -கொழும்பு சர்வதேச பாடசாலை) கேதாரகௌரி( பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் -பிரதேச செயலகம் நல்லூர்) வித்தியாகௌரி காலஞ்சென்ற மோதிலால் (அபிவிருத்தி உத்தியோகத்தர் (மாநகரசபை-வவுனியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வொலன்ரீனா (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் தெல்லிப்பளை), சுஜித்தா (பணிப்பாளர், ERD- இலங்கை மத்திய வங்கி -கொழும்பு), மதிவர்ணன் (ஆசிரியர், சென் ஜோன்ஸ் கல்லூரி-யாழ்ப்பாணம்), மோகன்ராஜ் (அபிவிருத்தி உத்தியோகத்தர்- பிரதேச செயலகம், சங்கானை) ஆகியோரின் அன்பு மாமனாரும், ரிஸ்யா, ஜயவன், டவர்ஷன், தேஜனா, ஜஸ்வந்தி, கஷோனா, அஸ்ரேனா, அனோமிதன், அஸ்விகன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.10.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணிக்கு பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்து செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

ஜெகஜீவன் - 0776266337
கேதாரகௌரி - 0773832396


தகவல்:
குடும்பத்தினர்.

(CA 597351) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 01 . 06 . 1942



மறைவு 22 . 10 . 2025


## அருளம்பலம் ஆறுமுகம்

அவர்கள் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உதயன் குழுமத் தலைவரும், பணியாளர்களும்.

# மரண அறிவித்தல்

தோற்றம் 27 . 06 . 1955



மறைவு 24 . 10 . 2025

## செல்லத்துரை கணேசராசா

துரையன்வளவு தொல்புரம் கிழக்கை பிறப்பிடமாகவும், அளவெட்டி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை கணேசராசா அவர்கள் 24.10.2025 வெள்ளிக்கிழமை அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - சரஸ்வதி தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற தில்லையம்பலம் - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற ஜெயசாந்தியின் அன்புக்கணவரும், கேசவன், கஜேந்தினி (கனடா), ஜீவராஜ் (கனடா), நிருஜா (கொழும்பு), நிவேதினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சண்முகலிங்கம், தவலட்சுமி, வள்ளியம்மை, புஸ்பராசா, புஸ்பலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், நேசராசா (கனடா), ஜனனி (விவசாய போதனாசிரியர்), ஜெகதாஸ் (கொழும்பு), சசிகரன் (டோகா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஸ்ருதி (கனடா), ஆதித்ய கரிகாலன், கவின் அஸ்வினா (கொழும்பு), கோபிகா, சுலக்ஷிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.10.2025) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(CS 46170) E

தொடர்புகளுக்கு:
077 279 9359 (கஜன்)
+14373653899 (ஜீவா)

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## பேரம்பலம் கந்தசாமி (புத்தா)

சாவகச்சேரி சரசாலை வடக்கினை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பேரம்பலம் கந்தசாமி அவர்கள் கடந்த (23.10.2025) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பேரம்பலம் - தங்கமுத்து தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான சண்முகம் - பூரணம் தம்பதியரின் மருமகனும், நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தவமணி, சிவசுப்பிரமணியம் (SPS மணியம்) ஆகியோரின் சகோதரரும், சுதர்சன், சுசித்திரா, காலஞ்சென்றவர்களான பிரபாகர், சகிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், நவிலகுமாரன், றஜிதா, வினோஜா ஆகியோரின் அன்பு மாமனாரும், நிருபன், லக்ஷா, றிவிசா, ஜெனிஸ்கா, கரிகாலன், விதுஜன், சந்தோஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.10.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சரசாலை வடக்கு கொம்பிகுளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மலர்வு 17.12.1949
உதிர்வு [illegible]

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

(CS/59717) J-1

தகவல்:
குடும்பத்தினர்
076 874 9221

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## யாழ்.பிரதேச செயலராக சிவகாமி உமாகாந்தன்

யாழ்ப்பாணம்,ஒக்.26

யாழ்ப்பாணம் பிரதேச செயலராக இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த திருமதி சிவகாமி உமாகாந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கரவெட்டிப் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலராகக் கடமையாற்றியிருந்தார்.

இதேவேளை முன்பதாக யாழ்.பிரதேச செயலராகப் பணியாற்றிய சா.சுதர்சன் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராகப் பதவியுயர்வு பெற்றுச்சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-17)



## வடிகான் துப்புரவு

யாழ்ப்பாணம்,ஒக்.26

யாழ்.மாநகரசபையின் 13ஆம் வட்டாரத்தில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும், வடிகான் துப்பரவுசெய்யும் வேலைத்திட்டத்தின்கீழ், ஆசாத் வீதியின் வடிகான் அண்மையில் துப்புரவுசெய்யப்பட்டது. அந்தப்பகுதி மக்களின் கோரிக்கைக்கமைய யாழ்.மாநகரசபை உறுப்பினர் என்.எம்.அப்துல்லாவின் ஒருங்கிணைப்பில் வடிகான் துப்புரவுசெய்யப்பட்டது. (க-66)










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்கட்டண அதிகரிப்பு இலங்கைக்குக் கட்டாயம்

## சர்வதேச நாணயநிதியம் அழுத்தம்

**கொழும்பு, ஒக்.26**

**மின்சார சபையின் செலவை ஈடுசெய்வதற்காக கோரப்பட்டுள்ள மின்கட்டணத் திருத்தத்துக்கு அனுமதி வழங்கப்படவேண்டுமென சர்வ தேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.**

மின்கட்டணத்தை 6.8 சதவீதத்தால் அதிகரிப்பதற்கான மின்கட்டணத் திருத்த யோசனையைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அண்மையில் நிராகரித்தமை தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் ஊடகப்பேச்சாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரச நிறுவனங்களின் செலவுகளை ஈடுசெய்யும் முறையொன்றை நடைமுறைப்படுத்தினால் அந்த நிறுவனங்களில் ஏற்படக்கூடிய நிதிசார் நெருக்கடி நிலைமையைத் தவிர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

செலவுக்கு ஏற்ற கட்டண முறையை நடைமுறைப்படுத்தாமையின் காரணமாக இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகிய நிறுவனங்கள் மீண்டும் நஷ்டத்தைச் சந்தித்தால், அவ்விரு நிறுவனங்களும் அரசுக்குச் சுமையாக மாறும் போது அந்த சுமை வரிச் செலுத்துபவர்களின்மீது சுமத்தப்ப டும்.

ஓரலகு மின் உற்பத்திக்கு செலவு செய்யப்படும் நிதி மீள

அறவிடக்கூடிய கட்டண முறையொன்றைச் செயற்படுத்தப்படும் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் சகலவிதமான மின்கட்டணமும் திருத்தப்பட வேண்டும்.

இந்தக் கொள்கையின் அடிப்படையிலேயே இலங்கையின் மின் கட்டணம் தொடர்பில் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தீர்மானம் எடுக்கப் படவேண்டும்.

மின் கட்டணத் திருத்தம் சில விடயங்களில் தங்கியுள்ளது. அந்த விடயங்களின் இடைக்கால மாற்று விகிதங்கள் தரவுகள், வட்டி விகித தரவுகள், மழை வீழ்ச்சி, எரிபொருள் மற்றும் நிலக்கரி ஆகிய விற்பனைக் காரணிகளில்கட்டணம்தீர்மானிக்கப் படும்.

அதேபோன்று, சர்வதேச மசகு எண்ணெய்க்கான சந்தை விலையில் ஏற்படும் மாற்றங்கள் மின் கட்டணத்தில் தாக்கம் செலுத்துகின்றன- என்றார்.

(ச-இ)



கொடிகாமம் மத்தி, கொடிகாமம் தெற்குக் கிராமங்களில் ஏற்படும் வெள்ளப் பாதிப்புகளைக் குறைக்கும் வகையில் வெள்ளவாய்க்கால் தூர்வாரும் பணிகள் பிரதேச செயலாளர் எவ்.சீ. சத்தியசோதியின் தலைமையில் அண்மையில் இடம்பெற்றன. (ச-25,9)



மட்டக்களப்பு குருக்கள்மடம் ஸ்ரீலஸ்ரீ செல்லக்கதிர்காம சுவாமி ஆலயத்தில் கந்தசஷ்டி விரத பூஜை வழிபாடுகள் கடந்த புதன்கிழமை பக்திபூர்வமாக ஆரம்பமாயின. ஆலய பிரதம குரு சிவ ஸ்ரீ சிவகரன் குருக்கள் தலைமையில் தொடர்ந்து 6 நாள்கள் விஷேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று நாளை திங்கட்கிழமை சூரசம் ஹார நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ச-25)

## வவுனியாவில் இவ்வருடத்தில் விபத்துகளால் 18 பேர் பலி!

வவுனியா, ஒக்.26

வவுனியாவில் 2021ஆம் ஆண்டில் இருந்து தற்போது வரை பல்வேறு விபத்துச் சம்பவங்களினால் 58 பேர் பலியாகியுள்ளனர்.

விபத்துகள் தொடர்பாக வவுனியா மாவட்டப் பொது மருத்துவமனையிடம் தகவல் அறியும் சட்டம் மூலமாகப் பெறப்பட்ட தகவலில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

குறித்த தரவுகளின் அடிப்படையில் இவ்வருடத்தில் மட்டும் இதுவரை 18 பேர் பலியாகியுள்ளனர்.

கடந்த வருடங்களைவிட விபத்துகளால் பலியானவர்களின் வீதம் அதிகரித்துள்ளது. அத்துடன் கடந்த ஐந்து வருடங்களில் விபத்துகளினால் 18 வயதுக்குக் குறைந்தவர்கள் 8 பேர் பலியாகியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-இ)

**நாய்க்குட்டி விற்பனைக்கு**

சிட்டு செறியர் 2 மாதம் நிறம்பிய நாய் குட்டி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
077 106 7982

(CS 4270)A

**மரண அறிவித்தல்**



**டொமினிக் றோஸ் செலஸ்ரின்**

கரம்பனைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட டொமினிக் றோஸ் செலஸ்ரின் (ஜெயமணி) கடந்த 24.10.2025 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை - அன்னம்மாள் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வஸ்தியாம்பிள்ளை - எலிசபேத் தம்பதியரின் அன்பு மருமகளும், மற்றும் டொமினிக்கின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான திரேசம்மா, எட்மிசம்மா, மரியமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், அன்ட்று ஜஸ்ரின் (பிரான்ஸ்), அன்ரனிற்றா ஜொய்சி, டினோஜொஜிற்றா, டிசியாந்தி (நெதர்லாந்து), மேளின் மரிற்றா (கிராம உத்தியோகத்தர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கஜலின் சிரோமா (பிரான்ஸ்), எட்மன் ஜெயக்குமார், உஜிதன் (கனடா), அன்ரன் நிஷாந்தன் (நெதர்லாந்து), யூட் ஜெயக்குமார் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், மகளிர் விவகார அமைச்சு, வட மாகாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெனுக்ஷி, காருண்யா, நிதின் சிந்தியா, ஜெமேக்ஷா, அட்ரியான், அனன்யா, சாத்வீகா, ஷெர்விக், சயானா, அன்சிகா, அடோலினா, சாதுரியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (27.10.2025) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு, பின்னர் பூதவுடல் கரம்பன் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**17/2 B, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.
076 20 55 180**

**தகவல்
குடும்பத்தினர்.**

**வீடு வாடகைக்கு (3 Bed Rooms)**

இடம்: ஆடியபாதம் வீதி, கறிவேப்பிலை லேன், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

மாத வாடகை : Rs. 40,000.00
Advance : Rs. 200,000.00

தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்
0094753645193
(Whatsapp இல் மட்டுமே தொடர்பு கொள்ள முடியும்)

(CS 4273) A

**காசாளர் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் Food Truck ற்கு காசாளர் தேவை.
வேலை நேரம் - 5 p.m - 11 p.m
மேலதிக விபரங்களுக்கு
076 175 4225

**காணி விற்பனைக்கு**

முல்லைத்தீவு வற்றாப்பளை மெயின் வீதியில் 11 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

071 856 2098
077 714 6661

(CS 4272)A

**நாகபூஷணி திருமண சேவை**

அரச, தனியார், உள்நாட்டு, வெளிநாட்டு அனைத்து மணமக்கள் ஜாதகங்களும் எம்மிடம் உண்டு. மிகப் பொருத்தமாக, திருமணம் துரிதமாக நிறைவேற்றித் தரப்படும்.

359/6, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(துர்க்கா மணிமண்டபத்திலிருந்து 3 வீடு தள்ளிய லேனில்)

077 138 7596, 071 9999 306

(CS 4272) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டை நியாயப்படுத்தவே முடியாது!

## சட்டத்தரணி ஸ்ரீகாந்தா காட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 26

தென்மராட்சி கெற்பேலி பகுதியில், மணலுடன் பயணித்த உழவியந்திரத்தின் மீது பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூடு சட்டவிரோதமானது இவ்வாறு தமிழ்த்தேசியக் கட்சியின் தலைவரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான என்.சிறீகாந்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:

சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்றார் என்ற சந்தேகத்தின் பேரில், கொடிகாமத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் மீது பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர். பொலிஸாரின் இந்தச் செயற்பாடு, மிகவும் மோசமானது என்பதுடன் எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாததுமாகும்.

சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் செல்லும் வாகனத்தை நிறுத்துவதற்கு பொலிஸாருக்குப் பல வழிகள் உள்ளன. கண் மூடித்தனமாக வாகனத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்வதற்கு சட்டத்தில் இடமில்லை. துப்பாக்கிச்சூடு நடத்தப்பட வேண்டிய தவிர்க்க முடியாத தேவை இருக்கின்றது என்றால், சக்கரத்தில்தான் வெடிவைக்க முடியும். ஆட்களின் மீது துப்பாக்கிச்சூடு நடத்த முடியாது. அதிர்ஷ்ட வசமாக அந்த இளைஞர் உயிர்தப்பியுள்ளார். இந்த விடயத்தில் முழுமையான விசாரணைகள் இடம்பெற வேண்டும். நீதிமன்ற விசாரணையில் பொலிஸார் உண்மையை மறைக்காமல், சிதைக்காமல் நடந்துகொள்ள வேண்டும் என்றுள்ளது. (ம-26)

# மக்களுக்கு வினைத்திறனான சேவையை உள்ளூராட்சிசபைகள் வழங்கவேண்டும்

## ஆளுநர் அறிவுரை

கிளிநொச்சி,ஒக்.26

**மக்களோடு நேரடியாகத் தொடர்புபட்டுப் பணியாற்றும் நிறுவனங்கள் உள்ளூராட்சிசபைகளே. எனவே மக்களுக்கு வினைத்திறன்மிக்க சேவைகளை விரைவாக வழங்கும் பொறுப்பு சபைகளின் தவிசாளர்கள் மற்றும் செயலாளர்களையே சாரும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார். கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள் மற்றும் செயலாளர்களுக்கான நகர அபிவிருத்தி அதிகாரசபையின் விதிமுறைகள் தொடர்பான பயிற்சித்திட்டம் கிளிநொச்சியிலுள்ள பயிற்சி அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்றது.**

நிகழ்வில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சிசபைகளைச் சார்ந்தவர்களுக்குத் தொடர்ச்சியாக பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட விருக்கின்றன. அவர்களை வலுப்படுத்துவதன் ஊடாகவே, எமது மாகாணத்தின் அடிமட்ட அலகான சபைகளைப் பலப்படுத்தமுடியும். சபைகள் சிறப்பாகச் செயற்பட்டால் தான் மக்களின் தேவைகளை முழுமைப்படுத்தமுடியும்.

மத்திய அரசாங்கத்தின்கீழான மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்கள் எவ்வாறு சுறுசுறுப்பாக விரைந்து மக்களின் தேவைகளைத் தீர்க்கின்றனவோ அதைப்போல, மாகாண அலகின் அலுவலகங்களும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டும்.

'அதற்கு மக்களால் தெரிவுசெய்யப்பட்ட தவிசாளர்கள் சிறப்பாகச் செயற்படவேண்டும். எதிர்காலத்தில் வடக்கு மாகாணத்தில் சிறப்பாகச் செயற்படும் உள்ளூராட்சி சபைகளைக் கௌரவிக்கவேண்டும் - என்றார். (க-113)




கொட்டும் மழைக்கு மத்தியிலும் கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தில் கேதாரகௌரி விரதப் பூர்த்தி வழிபாடுகள் அண்மையில் சிறப்புற இடம்பெற்றன. (ச-இ)

## ஹெரோய்னுடன்...

யாழ்ப்பாணம் - குருநகர் பகுதியில் ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணப் பொலிஸ் போதைத் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 22 வயதுடையவர் என்றும், அவரிடம் இருந்து 200 மில்லிகிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-27)

## 11 பேருக்கு...

என்று யாழ்ப்பாணம் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.பி.எஸ்.ஜெயமஹா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போதைப்பொருள் கடத்தல், வன்முறைகள், வட்டிக்கு விடுதல் உள்ளிட்ட சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுச் சொத்துச் சேர்த்தவர்களுக்கு எதிராக நாடளாவிய ரீதியில் அண்மைக்காலமாக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இதுவரை 11 பேர் இந்த விசாரணை வளையத்துக்குள் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களுக்குச் சொந்தமாக சொகுசுக் கார்கள், ஆடம்பர விடுதிகள், இறால் பண்ணைகள், உள்ளூரிலும் வெளிமாவட்டங்களிலும் பல்பொருள் அங்காடிகள் என்பன உள்ளன. அந்தச் சொத்துக்கள் தொடர்பில் முழுமையான புலன் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. அவை சட்டவிரோதமாகப் பெறப்பட்டவை என்பது உறுதிப்படுத்தப்பட்டால் அந்தச் சொத்துகள் அனைத்தும் முடக்கப்படும் - என்றார். (அ-ம-26)

## நவ. 5ஆம்...

யாக இலங்கை முழுவதும் சுனாமி ஒத்திகை நடத்தப்படவுள்ளது.

இந்திய சுனாமி முன்னறிவிப்பு மையத்தில் அங்கம் வகிக்கும் 28 நாடுகளை உள்ளடக்கிய வகையில் தற்போது பரவலாக சுனாமி ஒத்திகைகள் இடம்பெற்று வருகின்றன. இதன் தொடர்ச்சியாகவே, இலங்கையில் நவம்பர் மாதம் 5ஆம் திகதி ஒத்திகையை நடத்தத் தீர்மானித்துள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையத்தில் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சம்பத் கொட்டுவேகொட தெரிவித்துள்ளார். (அ-ம)

## மணல்...

கான தேவை ஏற்பட்டது எனவும் பொலிஸ் தரப்பில் கூறப்பட்டது. இவ்வாறான நிலையிலேயே பொலிஸாரின் குற்றச்சாட்டுக்களை துப்பாக்கிச் சூட்டுக்கு உள்ளான இளைஞரின் உறவினர்கள் மறுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

சம்பவம் இடம்பெற்ற பகுதியில் கிணறு ஒன்று வெட்டப்பட்டு வருகின்றது. எனவே, அங்கு குவிக்கப்படும் மணலை அருகில் உள்ள கடைக்கு முன்பாக கொட்டுவதற்கு ஏற்றிச் சென்றபோதே, பொலிஸார் இந்தத் துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளனர். துப்பாக்கிச் சூடு நடத்தவேண்டிய தேவை உண்மையில் பொலிஸாருக்கு இருக்கவில்லை. சட்டவிரோத மணல் கடத்தல் இடம்பெறுகின்றதா என்ற சந்தேகம் பொலிஸாருக்கு இருந்திருந்தால், அவர்கள் உழவியந்திரத்தை விரட்டிச்சென்று இடைமறித்திருக்கலாம். ஏனெனில் உழவியந்திரம் ஒன்றும் மணிக்கு 100 கிலோமீற்றர் வேகத்தில் பயணிக்கும் வாகனம் அல்ல. எனவே, இந்த விடயத்தில் உரிய விசாரணை நடத்தப்பட்டு எமக்கு நீதி கிடைக்க வேண்டும் - என்றனர். (அ-ம-26)

## சுன்னாகத்தில்...

வீடொன்றின் மீது, இனந்தெரியாத குழுவால் நேற்று அதிகாலை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று நள்ளிரவு ஒரு மணியளவில் அத்துமீறி நுழைந்த சிலர் வீட்டின் மீது தாக்குதல் நடத்தியதுடன், பெற்றோல் குண்டும் வீசியுள்ளனர். இந்தத் தாக்குதல் தொடர்பில் சுன்னாகம் பொலிஸாரிடம் முறையிடப்பட்ட நிலையில், மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-26)

## வடமாகாணத்தில்...

மின்சாரசபை அறிவித்துள்ளது. மின் வடத்தை மாற்றியமைப்பதற்கான பணிகள் மற்றும் திருத்தல் வேலைகளைக் கருத்திற்கொண்டே இந்த நீண்ட மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. பணிகள் நிறைவடைந்ததும் மின்சாரம் வழமைக்குத் திரும்பும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

## மழுங்கடிக்கப்...

மாகாணசபைத் தேர்தல் உட்பட சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் உதயனுக்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் தமிழர்கள் ஏராளமான பிரச்சினைகளுடன் வாழ்ந்து வருகின்றனர். ஆனால், அவர்களுக்கு அவ்வாறான பிரச்சினைகள் இல்லை என்பதைப்போன்றதொரு பிம்பம் கடந்த அரசாங்கங்களின் காலத்தில் ஏற்படுத்தப்பட்டது. தற்போதும் அவ்வாறான நிலையே தொடர்கின்றது. தமிழ் தேசியக் கட்சிகளுக்கிடையிலான பிளவும் இதற்குப் பிரதான காரணமாக அமைகின்றது. பிளவுகள் இருந்தாலும், தீர்வுக்கான பொது வேலைத்திட்டத்தின் கீழ் தமிழ்க் கட்சிகள் ஒருமித்துச் செயற்பட வேண்டும்.

ஆளுங் கட்சிக்கான மக்கள் ஆதரவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. கூட்டுறவுத் தேர்தல்களில்கூட ஆளுங்கட்சிக்கு தோல்வி ஏற்பட்டு வருகின்றது. எனவே, மாகாணசபைத் தேர்தலை இழுத்தடிப்பதற்கே அதிகாரத் தரப்பு முற்படக்கூடும். அதற்கான ஆயுதமாக எல்லை நிர்ணய விடயம் பயன்படுத்தப்படலாம். எனினும், இந்தியா மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை என்பன தேர்தலை நடத்துமாறு வலியுறுத்துவதால், தேர்தல் நடத்தப்படவும் சாத்தியங்கள் உள்ளன - என்றார். (அ-ம-44)

## செவ்வந்தியின்...

கிளிநொச்சி - அம்பாள்குளம் பகுதியில் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சியில் இஷாரா செவ்வந்தி பதுங்கியிருந்த இடங்கள் மற்றும் அவருக்கு அடைக்கலம் கொடுத்தவர்கள் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. இதன்போதே, பொலிஸாருக்கு இரகசியத் தகவல் வழங்கப்பட்டு சந்தேகநபர் ஒருவர் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளார். அந்த நபர் சான்றுப் பொருள்களுடன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞானோதயம் செல்வசாந்தி வெளியீட்டகம்
பிரதம ஆசிரியர் திரு.செ.திலக்

**2026 ஆம் ஆண்டு தரம் 4, 5 இற்கான புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.**

**05.11.2025 முதல்**

- வாரத்திற்கு நான்கு வகுப்புக்கள்
- வாரம் தோறும் மாதிரி வினாத்தாள் மற்றும் அலகுப் பரீட்சைகள்
- நவீன கற்பித்தல் சாதனங்கள் ஊடாக கற்பித்தல்



அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டவை முன்பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு : 075 019 1172

கிளை 01 :
28C, பிறவுண் வீதி,
யாழப்பாணம்.
( தொழில்நுட்பவியல் கல்லூரி முன்பாக )

கிளை 02 :
08ஆம் கட்டை வீதி, தெல்லிப்பளை.
( துர்க்கையம்மன் கோயில் தெற்கு வாசல் முன்பாக )

## வீட்டுப் பணிப்பெண் தேவை
யாழ் நகரில் 5 பேரைக் கொண்ட குடும்பம் ஒன்றில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை

- சம்பளம் 60,000/-
- உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.
- வயதெல்லை 33 - 55

தொடர்புகளுக்கு:
075 498 5400, 077 937 0000
021 221 7600

## வேலையாட்கள் தேவை
யாழ் அரியாலையில் இயங்கும் பல்பொருள் அங்காடிக்கு வேலையாட்கள் தேவை.
அரியாலையை அண்டிய பிரதேசத்தில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 540 0425

## காணி உடனடி விற்பனைக்கு
யாழ் இராமநாதன் வீதியில் பல்கலைக்கழகத்திற்கு அருகில் 1 1/4 பரப்பு சுற்று மதில் குழாய்கிணற்றுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.
வீடு விடுதி கட்டுவதற்கு உகந்தது.

தொடர்பு: 077 723 5740

## ஆண் வேலையாள் தேவை
யாழ் நகரில் உள்ள செல்லப் பிராணிகள் விற்பனை செய்யும் கடை ஒன்றிற்கு ஆண் வேலையாள் தேவை
சம்பளம் 60000/=

தொடர்பு: 077 937 0000

## புடவைக் கடைக்கு ஆள் தேவை
திருநெல்வேலியில் உள்ள புடவை கடைக்கு ஆள் (பெண்) தேவை
சம்பளம் 30000/= வயதெல்லை 18-30
வேலை நேரம் : திங்கள் - சனி
9.00 AM - 7.00 PM
அருகில் உள்ளோர் விரும்பத்தக்கது

தொடர்பு: 076 306 3306

## வேலையாள் தேவை
பாணந்துறையில் வீட்டு பணிப்பெண் வேலைக்கு 50 வயதுக்கு மேல் இல்லாத பெண் தேவை. உணவு மற்றும் தங்குமிடம், மாத சம்பளம் ரூ.40,000 - 45,000 வழங்கப்படும்.

தொடர்பு: 071 891 3155

## வாடகைக்கு
கொக்குவிலில் பல்கலைக்கழக மாணவர்களுக்கு முழு வசதியுடனும் தங்குமிடம் உண்டு

தொடர்பு: 075 151 4077

## வீடு விற்பனைக்கு
யாழ்ப்பாணம் கலட்டி அம்மன் கோவில் வீதியில் 2 1/4 பரப்பு காணியில் 4 அறைகளுடன் வரவேற்பறை சமையலறை, 2 குளியலறை, விறாந்தை, தனிக்கிணறு என பெரிய வீடு உடனடியாக பாவனைக்கு ஏற்ற வகையில் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 532 1443

## Rooms மாத வாடகைக்கு
திருநெல்வேலியில், ஆடியபாதம் வீதிக்கு அருகாமையில் 2 Rooms மாத வாடகைக்கு இருக்கின்றது. 5 Rooms, 2 Halls, Kitchen உள்ள வீட்டில் தனித்தனி Toilet + Bathroom தனியாக அல்லது 2 பேருடன் Rooms எடுக்கலாம். With AC
வேலை செய்பவர்கள் தொடர்பு கொள்ளவும்:
077 9597 158

## பணிப்பெண் தேவை
யாழ்ப்பாணத்தில் தங்கி இருந்து வீட்டு வேலை மற்றும் சமையல் செய்யக்கூடிய இளம் பணிப்பெண் தேவை.

தொடர்புகளுக்கு:
077 298 7506


# மரண அறிவித்தல்



## சுப்பிரமணியம் சிவபாக்கியம்

சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சிவபாக்கியம் அவர்கள் கடந்த (22.10.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - தங்கச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - அன்னமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், கோடீஸ்வரி, கோடீஸ்வரன் (ஜேர்மனி), ஜெகதீஸ்வரன் (ஜேர்மனி), கௌதீஸ்வரன் (லண்டன்), ஜெகதீஸ்வரி (கனடா), லிங்கேஸ்வரன் (ஜேர்மனி), லிங்கேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரவியம், தவராஜா, கந்தசாமி, சிவராஜா, குணராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சர்வானந்தன், விக்கினேஸ்வரி (ஜேர்மனி), சுதர்சினி (ஜேர்மனி), செல்வா (லண்டன்), காசிவிஸ்வநாதன் (கனடா), செல்வாம்பிகை (ஜேர்மனி), விஜித்தன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், உசாந்தினி, செந்தில்குமரன், இளங்குமரன், ஜனனி, சகிர்த்தன், திலக்சன், திபிசன், அபினா, கரிஸ், வசிக்கா, விவேக்கா, துவாரகன், இலக்கியா, துவாரகா, ஆத்மிகா, அபிஸ், ஜெனியா, ஒலிவியா, காலஞ்சென்ற வசீகரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பார்க்கவி, ஆதித்தன், ஆதிரா, அர்த்தனா, அபிராம் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.10.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தோற்றம் 25.10.1939 — மறைவு 22.10.2025

சுதுமலை வடக்கு, மானிப்பாய்,
ஈஞ்சடி வைரவர் கோவிலடி.

தகவல்:
ஸ்ரீகுமரன் ஹாட்வெயார்
ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.10. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper


மலை : 34 வள்ளுவர் ஆண்டு : 2056 ஐப்பசி 09 ஞாயிற்றுக்கிழமை (26 சிகரம் :162

கண்கலங்கி காலமெல்லாம் காலங்கள் நாடகத்தை
கண்டவரும் கண்டாரே கண்சிச்சை – கண்ணீரும்
விட்டவரை வீட்டாரும் தேற்றியுமே விம்மினாரே
விட்டகட்டம் பார்க்காத தால்.

பொன்.சுதந்தன்

## 35 ஆண்டுகளாக நீளும்

# மகனுக்கான காத்திருப்பின் பெருவலி!



எஸ்.கீதபொன்கலன்

‘என் மகன் எனக்குக் கொள்ளி போடத்தான் ஆத்மா சாந்தியடையும்.’ தனது 86 ஆவது வயதில், குரல் தழுதழுக்க இந்த வார்த்தைகளைச் சொல்லும்போது, திருகோணமலையைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியை சாந்தமணியின் கண்கள் குளமாகிவிடுகின்றன. 1990ஆம் ஆண்டு 19 வயது இளைஞனாக இருக்கும்போது காணாமற்போன மகன் குணரெட்ணம் சாந்தகுமார் ஒருநாள் திரும்பி வருவான் என்ற நம்பிக்கையில் அந்தத் தாய் இன்னும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்.

இலங்கையில் மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக நீடித்த உள்நாட்டு யுத்தம், ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்க்கையைத் தலைகீழாகப் புரட்டிப் போட்டுவிட்டது. யுத்தம் முடிவடைந்து 16 வருடங்கள் கடந்துவிட்டபோதிலும், உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் பாதிக்கப்பட்ட பலருடைய வாழ்க்கையில் இன்னும் வசந்தம் வரவில்லை. குறிப்பாக, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் வலிகள், ஆறாத காயங்களாக அவர்களின் மனங்களில் ஆழமாகப் பதிந்துள்ளன. வடக்கிலும் கிழக்கிலும் ஆயிரக்கணக்கானோர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். திருகோணமலையில் மட்டும் 1990ஆம் ஆண்டு முதல் இன்றுவரை சுமார் ஆயிரத்து 900 பேர் காணாமற்போயுள்ளனரென காணாமற்போனோரின் உரிமைகளுக்காக இயங்கும் அமைப்புகள் கூறுகின்றன. காணாமற்போனவர்களின் உறவினர்கள், குறிப்பாக தாய்மார், தங்கள் உறவுகளைத் தேடி சர்வதேச மனித உரிமைகள் தினங்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் தினங்களில் தொடர்ச்சியாகப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இவர்களில், சுமார் 355 பேர் தங்கள் பிள்ளைகளைத் தேடி அலைந்தபடியே உயிரிழந்துள்ளனர் என்பது துயரமான உண்மை.

## குமரன் எங்கே?

இலங்கையில் காணாமற்போன ஆயிரக்கணக்கானோரில் ஒருவர்தான் குமரன். 1990ஆம் ஆண்டு ஜூலை 11ஆம் திகதி காலை 6 மணிக்கு, பாதுகாப்புப் படையினரின் அறிவிப்புக்கு இணங்க, திருகோணமலையில் உள்ள மக்கேய்சர் விளையாட்டு மைதானத்திற்கு சாந்தமணியும் அவரது குடும்பத்தினரும் சென்றனர். அங்கு நடந்த சோதனையின்போது, சாந்தமணியின் 19 வயது மகன் குமரன் கைது செய்யப்பட்டு, கைகள் கட்டப்பட்ட நிலையில் ஒரு பஸ்ஸில் ஏற்றி அழைத்துச்செல்லப்பட்டார்.

மகன் கைதுசெய்யப்பட்ட பிறகு, அவனை மீட்க சாந்தமணி பல வழிகளில் முயற்சித்தார். மகனைத் தேடும் முயற்சியில் முழுமையாக ஈடுபடுவதற்காக, ஆசிரியர் பதவியிலிருந்து 30 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னரே சாந்தமணி ஓய்வு பெற்றார். மகன் காணாமற்போனது முதல் அவருக்கு நிம்மதியான தூக்கமோ, உணவோ இல்லை. 1993ஆம் ஆண்டில், கொழும்பிலுள்ள பிரபல நபர் ஒருவர் மூலம் குமரன் மகசின் சிறைச்சாலையில் இருப்பதாகத் தகவல் கிடைத்தது. மறுநாள் மகனைச் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால், அன்று ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ படுகொலை செய்யப்பட்டதால், அந்த வாய்ப்பும் இல்லாமற்போனது. இதனால், சாந்தமணி மிகுந்த மனவேதனையுடன் கொழும்பிலிருந்து திரும்பவேண்டிய நிலை ஏற்பட்டது.

## தொடரும் ஏமாற்றங்கள்

மகனைத் தேடும் இந்தப் போராட்டத்தில் தான் எவ்வாறெல்லாம் நம்பவைத்து ஏமாற்றப்பட்டேன் என்பதை சாந்தமணி இப்படிக் கூறுகிறார்:

‘2021ஆம் ஆண்டு உறவினர் ஒருவரின் மூலமாக கிளிநொச்சி நபர் ஒருவருடைய தொடர்பு கிடைத்தது. தான் சிறையில் இருந்து வந்தவர் எனவும் மகனை வெளியில் எடுக்க உதவி செய்யமுடியும் எனவும் அவர் தெரிவித்தார். வீட்டுக்கு வந்து மகன் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொண்டு அவருடன் கதைக்க வைப்பதாகவும் தெரிவித்தார். பின்னர் சிறைச்சாலையில் இருந்து தயாரதன் என்ற நபர் ஒருவர் என்னுடன் தொடர்பு கொண்டு கதைத்தார். மகன் குமரன் சுகவீனமுற்றிருப்பதாகவும் அவருடன் இரண்டு தினங்களில் கதைக்கவைப்பதாகவும் கொச்சைத் தமிழில் கூறினார். சொன்னதைப் போன்று இரு நாள்களில் மகனை என்னுடன் கதைக்கவைத்தனர். நடுங்கிய குரலில் மகன் என்னுடன் கதைத்தான். அது வேறு யாரினது குரலும் இல்லை. அது என்னுடைய மகனின் குரல்தான். பெற்ற தாய்க்குத் தெரியாதா மகனுடைய குரலை? ஏன் அம்மா என்னை இவ்வளவு காலமும் பார்க்க வரவில்லை? என்னை வெளியே எடுங்கள் என்று அழுதான். எனது மகன் கிடைத்துவிட்டான் என்ற ஆனந்தத்திலும் இவ்வளவு காலமும் அவனை வெளியே எடுக்க முடியாத பாவியாக இருந்திருக்கிறேனே என்ற குற்ற உணர்விலும் என்னால் அன்று பெரிதாக கதைக்க முடியவில்லை. சில நிமிடங்களில் இணைப்பைத் துண்டித்தனர். இவ்வாறு கிட்டத்தட்ட நான்கு, ஐந்து தடவை மகனுடன் கதைத்திருக்கிறேன். தொலைபேசி ஒன்றும் சிம் அட்டை ஒன்றும் வாங்கிக்கொடுத்தேன். இடைக்கிடையே மகனுடன் அவர்கள் மூலமாக கதைத்தேன்.

இதன்போது குறித்த நபர்களிடம் மகனை வெளியே எடுத்து தருமாறு மன்றாடினேன். அதற்கவர்கள் மகனை வெளியே எடுக்க நிறைய பேருக்கு பணம் கொடுக்கவேண்டும் என்றார்கள். நானும் அதற்குச் சம்மதித்தேன். மகனை எப்படியாவது நேரில் சந்திக்க வேண்டும் ஏற்பாடு செய்யுங்கள். எனக் கேட்டேன். அதற்கு அவரை வெளி இடங்களில் வைத்துக் காட்ட முடியாது. அதற்காக வீடு ஒன்றை வாடகைக்கு எடுக்க வேண்டும் எனவும் வீடு ஒன்றை பார்த்துவிட்டுச் சொல்வதாகவும் கூறினார்கள். சில நாள்களின் பின்னர் வீடு ஒன்று இருக்கிறது எனவும் அதற்கு முற்பணம் மூன்று இலட்சம் ரூபாவும் வாடகை ஐம்பதாயிரம் ரூபாவும் கொடுக்க வேண்டும் எனக் கூறி என்னிடம் பணம் கேட்டார்கள். என்னிடம் அவ்வளவு பணம் இல்லை எனக் கூறினேன். இருந்தாலும் மகனை எப்படியாவது பார்க்கவேண்டும் என்ற ஆவலிலும் முற்பணம் திரும்பி வரும்தானே என்ற நம்பிக்கையிலும் கடன்வாங்கி கொடுத்தேன். பின்னர் என்னை கொழும்புக்கு வரச் சொன்னார்கள். அங்கே போய் 13 நாள்களுக்கு மேல் தங்கி நின்றேன். இன்று வருவார் நாளை வருவார் என்று சொன்னார்களே தவிர மகனும் வரவில்லை அவர்களும் வரவில்லை. இறுதியில் தொலைபேசி அழைப்புகளுக்கும் அவர்கள் பதிலளிக்கவில்லை.

## மீண்டும் அழைப்பு

மீண்டும் சில மாதங்களில் அவர்கள் தொடர்புகொண்டு மகனை அநுராதபுரத்தில் உள்ள சிங்களவர் ஒருவரின் வீட்டில் தங்க வைத்திருப்பதாகவும் இராணுவ முகாம் ஒன்றுக்கு அருகில் வந்து நிற்குமாறும் தெரிவித்தனர். வாகனம் ஒன்றுடன் நள்ளிரவு வரை காத்திருந்தோம். இந்த நேரத்தில் மகன் என்னுடன் தொலைபேசியில் கதைத்தார். வாகனம் பழுதாகி இருப்பதாகவும் திருத்திக் கொண்டு இருப்பதாகவும் தெரிவித்தார். நள்ளிரவானதால் வீட்டுக்கு திரும்பிவிட்டோம். பின்னர் வவுனியாவுக்கு பணத்துடன் வருமாறு கூறினார்கள். அங்கே அவர்கள் கூறிய இடத்திற்கு பஸ்ஸில் சென்று காத்திருந்தேன். அங்கு வந்து பணத்தை பெற்றுக்கொண்டு சென்றார்கள். இவ்வாறு மட்டக்களப்பில் வைத்து ஒரு தடவையும், திருகோணமலையில் வைத்து இரண்டு தடவைகளும், வவுனியாவில் வைத்து மூன்றுக்கு மேற்பட்ட தடவைகளும்; கொழும்பில் வைத்து இரு தடவைகளும் அவர்களின் கையில் பணம் கொடுத்திருக்கின்றேன்.

இப்படி கிட்டத்தட்ட 20 இலட்சத்துக்கும் மேல் கடன்பட்டு நகைகளை விற்று யாருக்கும் தெரியாமல் பணம் கொடுத்தேன். அத்தோடு வங்கிக்கணக்கு ஒன்றிற்கும் இரண்டு லட்சம் ரூபா வைப்பிலிட்டேன்.

இறுதியாக திருகோணமலை பஸ் தரிப்பு நிலையத்தில் கொண்டுவந்து இறக்குவதாகவும் அங்கு வந்து நிற்குமாறும் கூறினார்கள். காலையில் இருந்து இரவு வரை பஸ்தரிப்பு நிலையத்தில் காத்திருந்தேன். அவ்வளவுதான். மகனும் வரவில்லை அவர்களிடமிருந்து இருந்து இன்று வரை எவ்வித அழைப்புகளும் வரவில்லை.

இவ்வாறு இலட்சக்கணக்கான பணத்தையும் இழந்து, இரவு பகல் பாராது மகனுக்காகக் காத்திருக்கிறேன். ஆனாலும் நம்பிக்கையைக் கைவிடவில்லை.

எனது மகன் எப்படியாவது என்னிடம் வருவான். சாவதற்கு முதல் அவனை நான் பார்ப்பேன். அவர்களிடமிருந்து ஏதாவது தகவல் வராதா என்று ஒவ்வொருநாளும் தொலைபேசியை பார்த்துக் கொண்டிருக்கின்றேன் என்கிறார் சாந்தமணி.

உண்மையில் குமரன் இன்னமும் உயிருடன் இருக்கிறாரா? குமரனைக் காண்பிப்பதாகக் கூறி அவரது தாயாரை ஏமாற்றி இலட்சக்கணக்கில் பணம் கறந்தவர்கள் யார்? என்ற கேள்விகளுக்கு விடை காணப்படவேண்டும். 35 வருடங்களாக தனது மகனுக்காக காத்திருக்கும் சாந்தமணியின் இறுதி ஆசை நிறைவேறுமா? அல்லது மகனுக்கான ஏக்கத்துடனேயே அந்த 355 தாய்மார்களையும் போல இவரும் மரணித்துப் போவாரா? காலம்தான் பதில் சொல்லும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செவ்வந்தியின்மீது ஈர்ப்பா வெறுப்பா?

## நாட்டின் அரசியல் எப்படிக் குற்றமயப்பட்டது?

○ நிலாந்தன்

செவ்வந்தியோ சூரியகாந்தியோ அவர் பாதாள உலகங்களோடு சம்பந்தப்பட்டதற்காகத் தேடப்பட்டவர். குற்றம் நிகழ்ந்த பின் நாட்டை விட்டுச் தப்பிச்சென்ற அவரைக் கைதுசெய்ய வேண்டியது அரசாங்கத்தின் கடமை. நேபாளத்தில் அவர் தங்கியிருந்த இடத்தைக் கண்டுபிடித்ததும் கைது செய்ததும் சாகசச்செயல்களோ வீரச்செயல்களோ அல்ல. அரசுக்கும் அரசுக்கும் இடையிலான கட்டமைப்பு சார் உறவின் அடிப்படையில் இலங்கை அரசாங்கம் நேபாள அரசாங்கத்தோடு தொடர்புகொண்டு சந்தேக நபர்களைக் கைதுசெய்தது. இதில் என்ன சாகசம் இருக்கிறது? குற்றம் நடந்த பின் நாட்டை விட்டுத் தப்பிச்சென்ற ஒருவரைக் கைதுசெய்வதுதானே பொலிஸாரின் கடமை? அதைச் செய்த பொலிஸ் அதிகாரியை ஏன் ஒரு சாகசவீரனாகப் போற்றி உயர்த்தவேண்டும்? அவர் தன்னுடைய தொழிலைத்தானே செய்தார்?

ஆனால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் அதன் டிஜிட்டல் புரோமோஷன் அணியும் அதனை வீர தீரமான, ஆபத்துகள் மிகுந்த ஒரு சாகச நடவடிக்கையாகச் சித்தரிக்கின்றன. அதற்குத் தலைமை தாங்கிய பொலிஸ் அதிகாரியை ஒரு கதாநாயகன் அளவுக்கு உயர்த்துகின்றன. இங்கே எந்த வீரமும் கிடையாது சாகசமும் கிடையாது. அரசியல் குற்றமயப்பட்டிருக்கும் ஒரு நாட்டில், அரசியல்வாதிகள் பாதாள உலகங்களோடும் போதைப்பொருள் வலைப் பின்னலோடும் தொடர்புடையவர்களாகக் காணப்படும் ஒரு நாட்டில், பாதாள உலகக் குற்றவாளிகளால் விலைக்கு வாங்கப்பட முடியாத சில பொலிஸ் அதிகாரிகள் வீரர்களாகத் தெரிகிறார்கள் என்பதுதான் இங்குள்ள ஒப்பீடு.

நாட்டின் பொதுமக்கள் மத்தியில் நம்பகத்தன்மை இழந்த, ஊழல் மிகுந்தபத்து நிறுவனங்களில் முதலாவதாகப் பொலிஸ் நிறுவனம் காணப்படுகிறது. இந்தத் தகவலை சொன்னது அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட லஞ்சம் ஊழல் என்பவற்றை விசாரிப்பதற்கான ஆணைக்குழுவின் தலைவர் நீல் இடாவெல ஆகும். நாட்டின் காவல்துறை இவ்வாறு நாட்டில் மக்கள் மத்தியில் மதிப்பிழந்த பத்து நிறுவனங்களில் முதலாவதாகக் காணப்படும் ஒரு நாட்டில் அப்படிச் சில பொலிஸ் அதிகாரிகள் துணிச்சலாக நடவடிக்கை எடுப்பதை ஒரு சாகசச்செயலாகக் காட்ட வேண்டிய ஒரு நிலைமை.

ஆனால் நாட்டின் அரசியல் எப்படிக் குற்றமையப்பட்டது அந்த கேள்விக்கு விடை தேடிப்போனால் அதற்கு ஜே.வி.பி.யும் ஒருவிதத்தில் பொறுப்பு. இன முரண்பாடு கள்தான் அதற்குக் காரணம். சிங்கள அரசியல்வாதிகள் எல்லாக் குற்றச்செயல்களையும் செய்துவிட்டு இனவாதத்துக்குள் பதுங்கிக்கொள்வார்கள். செவ்வந்தி கைது செய்யப்பட்ட நடவடிக்கையை விமர்சித்த விமல் வீரவன்ஸ, கே.பி. என்று அழைக்கப்படும் குமரன் பத்மநாதனைக் கைதுசெய்த நடவடிக்கையோடு ஒப்பிட்டுத்தான் அரசாங்கத்தை அண்மையில் விமர்சித்திருந்தார். எனவே இலங்கைத்தீவில் எல்லாக் குற்றங்களையும் செய்துவிட்டு சிங்கள அரசியல்வாதிகள் இனவாதத்தின் பின் பதுங்க முடியும் என்ற நிலைமை கடந்த நான்கு தசாப்தங்களுக்கு மேலாக ஒரு தீய அரசியல் கலாசாரமாக இருந்து வருகிறது. இவ்வாறு அரசியல் குற்றமயப்பட்ட ஒரு நாட்டில் அரசியல்வாதிகள் பாதாள உலகத் தலைவர்களோடு உறவுகளை வைத்திருப்பார்கள். சில நாள்களுக்கு முன் கொல்லப்பட்ட வெலிகமப் பிரதேசசபைத் தவிசாளர் மீதும், அவ்வாறான குற்றச்சாட்டுகள் வைக்கப்படுகின்றன. இப்பொழுது அரசாங்கம் பாதாள உலகக் குற்றவாளிகளையும் போதைப்பொருள் வலைப்பின்னலையும் முடக்க முயற்சிக்கின்றது. இதில் போதைப்பொருளுக்கு எதிரான போராட்டம் என்பது ஏற்கனவே சர்ச்சைக்குரிய முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தொடங்கியது தான். "யுக்திய" என்ற பெயரில் அவர் முன்னெடுத்த அந்த நடவடிக்கையில் நூற்றுக்கணக்கானவர்கள் கைதுசெய்யப்பட்டார்கள். அதில் சில என்கவுண்டர்கள் நடந்ததாக மனித உரிமை அமைப்புகள் குற்றஞ்சாட்டின. அந்த நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக அந்த நடவடிக்கைகளின் கனிகளை இப்பொழுது தேசிய மக்கள் சக்தி அறுவடை செய்கிறது என்பதே உண்மை. ஆனால் ஒப்பீட்டளவில் உயிர்ச் சேதம் குறைவு.

இந்த நடவடிக்கைகளை அரசாங்கம் திட்டமிட்டு மக்கள் முன் காட்சி மயப்படுத்துகின்றது. அரசாங்கத்தின் டிஜிற்றல் புரமோஷன் அணியானது கைது நடவடிக்கைகளை, போதைப்பொருள் கிடங்குகளை முற்றுகையிடும் நடவடிக்கைகளை, விலைக்கு வாங்கப்பட முடியாத பொலிஸ் அதிகாரிகளின் நேர்மையான நடவடிக்கைகளை பிரசார நோக்கத்தோடு உருப்பெருக்கிக் காட்டி வருகிறது. ஆனால் கடந்த ஓராண்டுக்கு மேலாக அநுர அரசாங்கம் கைதுசெய்தவர்களில் யார் மீதும் போர்குற்றச்சாட்டுகளோ அல்லது இன அழிப்புக்கு எதிரான குற்றச்சாட்டுகளோ முன்வைக்கப்படவில்லை.

**அரசாங்கம் திட்டமிட்டு மக்கள் முன் காட்சி மயப்படுத்துகின்றது. அரசாங்கத்தின் டிஜிற்றல் புரமோஷன் அணியானது கைது நடவடிக்கைகளை, போதைப்பொருள் கிடங்குகளை முற்றுகையிடும் நடவடிக்கைகளை, விலைக்கு வாங்கப்பட முடியாத பொலிஸ் அதிகாரிகளின் நேர்மையான நடவடிக்கைகளை பிரசார நோக்கத்தோடு உருப்பெருக்கிக் காட்டி வருகிறது. ஆனால் கடந்த ஓராண்டுக்கு மேலாக அநுர அரசாங்கம் கைதுசெய்தவர்களில் யார் மீதும் போர்க்குற்றச்சாட்டுகளோ அல்லது இன அழிப்புக்கு எதிரான குற்றச்சாட்டுகளோ முன்வைக்கப்படவில்லை.**

அரசாங்கம் இப்பொழுது கட்டுப்படுத்த முயற்சிக்கும் குற்றங்களுக்கெல்லாம் தாய்க்குற்றம் எது? பேரினவாதம் தான். தமிழ் மக்களுக்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்டவர்கள் இன்றுவரை நீதிக்குமுன் நிறுத்தப்படவில்லை. கைது செய்யப்பட்டிருக்கும் சில படை அதிகாரிகள் இன முரண்பாடு சம்பந்தப்பட்ட குற்றச்செயல்களோடும் சம்பந்தப்பட்டவர்கள் என்ற சந்தேகம் உண்டு. ஆனால் அவர்களுக்கு எதிராக இனமுரண்பாடு சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் இல்லை.

எனவே இலங்கைத்தீவில் குற்றங்களுக்கெல்லாம் தாய்க் குற்றமாகக் காணப்படும் குற்றத்தில் கை வைக்காமல் 'குற்றமில்லாத இலங்கையை உருவாக்கப் போகின்றோம்; பாதாள உலகங்களை ஒடுக்கப் போகிறோம்' என்று அரசாங்கக் கூறிவருகின்றது. உண்மையில் அரசாங்கம் செய்வது என்னவென்றால் எதன் மீது கவனத்தை குவிக்க வேண்டுமோ, எது தாய்க் காயமோ அதைச் சுகப்படுத்தாமல் அதன் விளைவுகளுக்கு சத்திர சிகிச்சை செய்து கொண்டிருக்கிறது.

நாட்டின் அரசியல்வாதிகளில் ஒரு தொகுதியினர் குற்றப் பின்னணியைக் கொண்டவர்கள், பாதாள உலகக் குழுக்களோடு தொடர்புடையவர்கள் என்பது பரவலான சந்தேகம். இவ்வாறு சந்தேகப்படும் அரசியல்வாதிகளில் பெரும்பாலானவர்கள் பாதாள உலகங்களில் தங்களுக்கென்று அடியாட்களை வைத்திருக்கிறார். இந்த நிழல்களை இப்பொழுது அரசாங்கம் நசுக்கத் தொடங்கிவிட்டது. அதனால் நிஜங்கள் பதற்றமடைகின்றன. நாமல் ராஜபக்ச...... "எந்தவித குற்றங்களோடும் தொடர்பில்லாதவர்களுக்கு மட்டுமே எமது பொதுஜன பெரமுனவில் எதிர்வரும் தேர்தல்களில் வேட்புமனு வழங்கப்படும்"என்று கூறியிருப்பது அதைத்தான் காட்டுகின்றது. ராஜபக்சக்கள் அவ்வாறு கூறவேண்டிய அளவுக்கு தென்னிலங்கையில் நெருக்கடி வந்திருக்கிறது என்பது நல்ல முன்னேற்றம்.

ஆனால் அது ஒரு பாதியளவு முன்னேற்றம்தான். இந்த நடவடிக்கைகளின் மூலம் தேசிய மக்கள் சக்தி தெற்கில் தனது வாக்கு வங்கியைப் பாதுகாக்கலாம். அடுத்த தேர்தலிலும் தனது வெற்றியை உறுதிப்படுத்தலாம். ஆனால் இந்தக் குற்றங்களுக்கு எல்லாம் தாய்க்குற்றமான இனவாதத்தை வெற்றிகொள்ளாத வரை இப்பொழுது கிடைக்கும் வெற்றிகள் யாவும் தற்காலிகமானவைதான்.

2009 ஆம் ஆண்டு இலங்கைத் தீவில் தோற்கடிக்கப்பட்டது தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம்தான். இனவாதம் அல்ல. ஆயுதப் போராட்டம் ஒரு விளைவு. அது மூலகாரணம் அல்ல. மூல காரணம் இனவாதம்தான். ஆயுதப் போராட்டத்தில் வெற்றி பெற்ற இனவாதம் ராஜபக்சக்களின் தலைமையில் யுத்த வெற்றிவாதமாக தன்னை அடுத்த கட்டத்திற்கு வளர்த்துக் கொண்டது. ஆனால் பொருளாதார நெருக்கடிகளின் விளைவாக யுத்த வெற்றிவாதம் தற்காலிகமாக பதுங்கியிருக்கிறது.


அவ்வாறு இனவாதம் அப்படியே இருக்கத்தக்கதாக அந்த இனவாதத்தின் விளைவாக உருவாக்கிய ஆயுதப்போராட்டத்தை தோற்கடித்ததை ஒரு நிலை மாற்றமாக கருதி 2015 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் நிலைமாறு கால நீதியை ஐ.நா. இலங்கைக்கு முன்மொழிந்தது. நிலைமாற்றம் ஏற்படாத ஒரு நாட்டில் நிலை மாறு கால நீதியை ஸ்தாபிக்க முடியாது என்பதைத் தான் 2018 ஆம் ஆண்டு மைத்திரிபால சிறிசேன முன்னெடுத்த யாப்புச் சதி முயற்சி நிரூபித்தது. மைத்திரி யார்?நிலை மாறுகால நீதியின் பெற்றோரில் ஒருவர். ஆனால் அவரே தன் குழந்தையைத் தோற்கடித்தார். இப்பொழுது சுமந்திரன் அவரை மேற்கோள் காட்டுகிறார். அந்த மேற்கோள் யாப்புருவாக்க முயற்சியின்போது மைத்திரி சொன்னது. தமிழ் மக்களையும் பயமுறுத்தாத சிங்கள மக்களையும் பயமுறுத்தாத வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டும் என்று மைத்திரி சொல்லியிருக்கிறார். அப்படி ஒரு வார்த்தைதான் "ஏக்கிய ராஜ்ய" என்று சுமந்திரன் இப்பொழுது விளக்கம் தருகிறார். தமிழ் மக்களும் சிங்கள மக்களும் பயப்படும் ஒரு நிலைமை என்பது எதைக் காட்டுகிறது? நாட்டில் இனமுரண்பாட்டு அரசியலில் நிலை மாற்றம் ஏற்படவில்லை என்பதைத்தானே? சமாதானத்துக்கான கூட்டு உளவியல் சூழல் உருவாகவில்லை என்பதைத்தானே? தமிழ் மக்களைத் தோற்கடித்ததால் இனப்பிரச்சினை தீர்ந்துவிட்டது என்று நம்புவதே இனவாதம்தான். தோற்கடிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு வெளிப்படையாக சமஷ்டி என்று கூறி ஒரு தீர்வைக் கொடுக்க முடியாத ஒரு நிலை நாட்டில் இப்பொழுதும் உண்டு என்றால் அது இனவாதம் தான்.

03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

# செவ்வந்தியின்மீது ஈர்ப்பா வெறுப்பா...?





வெளிப்படைத்தன்மையற்ற ஒரு சமஷ்டியைத் தான் தீர்வாக வைக்கமுடியும் என்றால் அதுவும் இனவாதம்தான். எனவே ஏக்கிய ராஜ்ய என்ற அந்த வார்த்தையே நாட்டில் நிலைமாற்றம் ஏற்படாததன் விளைவாக உபயோகிக்கப்பட்ட ஒன்று தான்.

அதேநிலைமைதான் இப்பொழுதும் உண்டு. கடந்த ஓராண்டுக்கு மேலான தேசிய மக்கள் சக்தியின் கைது நடவடிக்கைகள் எவையும் இன முரண்பாடு சம்பந்தப்பட்ட குற்றச்செயல்க ளில் கைவைப்பவைகளாக இல்லை என்பதைச் சுமந்திரனும் சுட்டிக்காட்டியுள்ளார். எனவே நிலைமாற்றம் ஏற்படாத ஒரு நாட்டில் நிலைமாறு கால நீதியை ஸ்தாபிக்க முற்பட்டதால்தான் அது தோற்கடிக்கப்பட்டது. அதைத் தோற்கடித்தது சிங்களத் தரப்புத்தான். தமிழ்த்தரப்பு அல்ல. இப்பொழுது தோல்வியுற்ற நிலைமாறு கால நீதியின் குழந்தையாகிய ஏக்கிய ராஜ்யவை மீண்டும் மேசையில் வைக்கிறார்களா?.

கடந்த செப்ரெம்பர் மாதம் சுவிற்சர்லாந்து ஒழுங்குபடுத்திய சந்திப்பில் கலந்துகொண்ட அரச தரப்பு பிரதிநிதி ஏக்கிய ராஜ்யவை ஒரு தீர்வாக மேசையில் முன்வைத்ததாக கஜேந்திரகுமார் குற்றஞ்சாட்டுகிறார். அதாவது நிலைமாற்றம் ஏற்படாத ஓர் அரசியல்,ராணுவச் சூழலில் தயாரிக்கப்பட்ட புதிய யாப்புக்கான இடைக்கால வரைவை அரசாங்கம் மேசையில் வைத்திருக்கிறது என்று கஜேந்திரகுமார் எச்சரிக்கின்றார்.

அரசாங்கம் ஒரு புதிய யாப்பைக் கொண்டு வருமா? அல்லது மாகாணசபைத் தேர்தல்களை முதலில் வைக்குமா?என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் ஒரு புதிய யாப்பை உருவாக்கத் தேவையான மூன்றில் இரண்டு பெரும்பான்மை இப்பொழுது அரசாங்கத்திடம் உண்டு. மேலும் ஏக்கிய ராஜ்ஜியவுக்குத் தமிழ் மக்களின் ஆணை உண்டு என்று அரசாங்கம் கூறுகிறது.


ஏனென்றால் யாப்புருவாக்க முயற்சியில் 2015 இலிருந்து 2018 வரையிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அரசாங்கத்தோடு சேர்ந்து உழைத்தது. ஜே.வி.பி.யும் சேர்ந்து உழைத்தது. எனவே அந்த இடைக்கால வரைபுக்கு தமிழ் மக்களின் ஆணை உண்டு என்று அரசாங்கம் இப்பொழுது கூறமுடியும். அதுமட்டுமல்ல கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்மக்கள் தங்களுக்கும் ஆணை வழங்கியிருக்கிறார்கள் என்று அரசாங்கம் கூறுவதால் அவர்கள் ஒரு புதிய யாப்பை உருவாக்கும் முயற்சியில் இறங்கமுடியும் என்று கஜேந்திரகுமார் எச்சரிக்கிறார்.

ஆனால் கடந்த வாரம் வரையிலும் அவருடன் உறவாக இருந்த டி.ரி.என்.ஏ. நம்புகின்றது, முதலில் மாகாணசபைத் தேர்தல்தான் நடக்கும் என்று. மாகாணசபைத் தேர்தல்களை நோக்கி 'டி.ரி.என்.ஏ' உழைத்துவருகிறது. மாகாண சபைத்தேர்தலை நோக்கிக் கருத்தரங்குகளை ஒழுங்கமைத்து வருகிறது. அது காரணமாக 'டி.ரி.என்.ஏ'க்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் இடையிலான நெருக்கம் பெருமளவுக்குக் குறைந்துவருகிறது. அதாவது தமிழ்த்தேசியப் பேரவை ஈடாடத் தொடங்கிவிட்டது.

டி.ரி.என்.ஏ. நம்புவதுபோல மாகாணசபைத் தேர்தல் முதலில் நடந்தால் அதில் முன்னணியைத் தனிமைப்படுத்தும் நோக்கத்தோடு புதிய சேர்க்கைகள் உருவாக வாய்ப்புகள் உண்டு. டி.ரி.என்.ஏ மாகாணசபைத் தேர்தலில் யாரோடு நின்றால் வெல்லலாம் என்று சிந்திக்கும். அந்த அடிப்படையில் அவர்கள் வீட்டை நோக்கி நகரக்கூடும். மணிவண்ணன் அணியும் சுமந்திரனை நோக்கிச் சாயும் ஏதுநிலைகள் தெரிகின்றன. அதாவது அரசாங்கம் மாகாண சபைத் தேர்தல்களை முதலில் வைக்குமாக இருந்தால் அது தமிழ்க் கட்சிகளுக்கு இடையிலான முரண்பாடுகளைப் பிரதிபலிக்கும் ஒரு வாக்கெடுப்பாக அமையும். தமிழ்க் கட்சிகளுக்கு இடையிலான முரண்பாடுகள் மேலும் விகாரமடையக்கூடும். அது வடக்கு,கிழக்கு மாகாண சபைகளில் அரசாங்கம் பலமாகக் காலூன்றுவதற்குத் தேவையான வழிகளை இலகுவாக்கிக் கொடுக்கும்.

மாறாக, அரசாங்கம் புதிய யாப்புருவாக்க முயற்சியை முதலில் தொடங்கினால், அங்கேயும் தமிழ்க் கட்சிகள் ஐக்கியப்படும் வாய்ப்புகள் குறைவாகவே தெரிகின்றன. ஏனென்றால் ஏற்கனவே கஜன் யாப்புருவாக்க நோக்கி முன்னெடுத்த ஐக்கிய முயற்சிகளைத் தமிழரசுக் கட்சியின் சுமந்திரன் அணி தோற்கடித்து விட்டது. சுமந்திரன் ஏக்கிய ராஜ்யவை தன்னுடைய உழைப்பின் விளைவு என்று கருதுவதாகத் தெரிகிறது. எனவே யாப்புருவாக்க முயற்சிகளிலும் தமிழ்த்தரப்பு ஒருமுகமாக ஒரே நிலைப்பாட்டை எடுக்கத் தவறினால் என்ன நடக்கும்?

புதிய யாப்பின் முழுமைப்படுத்தப்பட்ட வரைவு முதலில் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறவேண்டும். அதன்பின் ஒரு வெகுசன வாக்கெடுப்புக்கு அது விடப்படவேண்டும். ஆனால் இனப்பிரச்சினைக்கான தீர்வில் இக்கட்டுரையில் ஏற்கனவே கூறப்பட்டதுபோல வெளிப்படைத் தன்மைமிக்க ஒரு கூட்டாட்சிக்கு ஆதரவாக சிங்கள மக்கள் வாக்களிப்பார்களா? சிங்கள மக்களின் ஆதரவைப் பெறவேண்டும் என்பதற்காக அரசாங்கம் வெளிப்படைத் தன்மை குறைந்த ஒரு புதிய யாப்பைத்தான் மேசையில் வைக்கும். எனவே கூட்டிக்கழித்துப் பார்த்தால் இப்போதுள்ள தமிழ்த் தேசிய அரசியல் சூழலில், மாகாண சபைத் தேர்தலோ அல்லது புதிய யாப்புருவாக்க முயற்சியோ எது முதலில் நடந்தாலும் இறுதியிலும் இறுதியாகத் தோற்கப்போவது தமிழ் மக்களா?



# தமிழர் பண்பாட்டின் பெருமை பறைமேள இசை

லவக்குமார் லாவணியா

பறை பற்றி பலரும் பேசும் காலம் இது. தமிழ்ப் பாரம்பரியக் கலை வடிவங்களில் ஒன்றாகப் பறை மேள இசை சிறப்பு இடம் வகிக்கிறது. பழங் காலம் தொட்டே தமிழர் வாழ்க்கையில் பறை முக்கியமான பங்கு வகித்துள்ளது. பழங்காலத் தமிழர் வாழ்வியலில் செய்தியூடகம் என்று ஒன்று இல்லாத காலகட்டத்தில், ஒரு நாட்டில் நடக்கும் நிகழ்வுகளை, அறிவித்தல்களை, அரசக் கட்டளைகளை ஊர் ஊராகச் சென்று சொல்லுதல் 'பறைதல்' என்றும், அவ்வாறு ஊர் ஊராகச் சென்று சொல்பவர் பறையர் என்பதும் அழைக்கப்பட்டனர்.

பறை மேள இசை ஒரு காலத்தில் தாழ்த்தப்பட்ட சமூகத்தின் கலை எனக் கருதப்பட்டாலும் இன்று அது தமிழர் அடையாளத்தின் பெருமையாக மாறியுள்ளது. சமூக நீதி இயக்கங்களிலும், கல்வி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளிலும் பறை ஒலிக்கும்போது அது ஒரு உரிமை ஒலியாக மக்களிடம் சென்று சேர்கிறது. பறையின் ஒலி ஆற்றல், வீரியம், ஒற்றுமை, எதிர்ப்பை வெளிப்படுத்தும் ஒரு குரல்.

பல சமூக அமைப்புகள் தற்போது பறைமேள இசைக்கலையை ஊக்குவித்து வருகின்றன. அந்தவகையில் பறை மேள மற்றும் சொர்ணாளி கலைஞர்களைக் கௌரவித்து அந்தக்கலைகளை ஊக்குவிக்கும் விதமாக 2025. 10. 11 (சனிக்கிழமை) அன்று காலை 10.00 மணியளவில், மூன்றாவது கண் நண்பர்கள் குழுவின் ஓர் அங்கமாகிய முரசம் பேரிசைக் கலைகள் கற்கை மன்றத்தின் ஏற்பாட்டில் பறை, சொர்ணாளி ஆற்றுகை நிகழ்வு நடைபெற்றது. அதில் களுதாவளையைச் சேர்ந்த பறை மேளக் கலைஞரான ச. திவ்ய புத்திரனும் சொர்ணாளிக் கலைஞரான ச. விஜய புத்திரனும் மற்றும் பறை இசைக் கலை வளர்ச்சிக்கு ஆதரவாக இயங்கும் தேனூரான் அண்ணாவியாரும் கௌரவிக்கப்பட்டதோடு பறை மற்றும் சொர்ணாளி என்பன இசைக்கப்பட்டு நிகழ்வில் பங்கு பற்றியவர்களுக்கு கற்றுக்கொடுக்கப்பட்டது. அதனை தொடர்ந்து மதிய விருந்துபசாரத்துடன் நிகழ்வு இறுதிக்கட்டம் அடைந்து முரசறைதல் சார்ந்த கருத்துப்பரிமாற்றத்துடன் நிகழ்ச்சி இனிதே நிறைவு பெற்றது. இதன் மூலம் பழமையான ஒரு கலை வடிவம் புதிய தலைமுறையிலும் நிலைத்திருக்கும் வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

பறை மேள இசை வெறும் இசை அல்ல : அது ஒரு சமூக வரலாறு, எதிர்ப்பு, பெருமை,மற்றும் பண்பாட்டு அடையாளம். அதன் ஒலியில் ஒற்றுமையும், உயிரோட்டமும் உறைந்துள்ளன. பறைமேள இசை என்பது காலத்தால் அழியாத தமிழர் பாரம்பரிய கலை. அது வெறும் ஒரு கலை வடிவமல்ல அது ஒரு அடையாளம், ஒரு குரல், ஒரு எதிர்ப்பு. இந்த மரபை நாம் பாதுகாக்கும் பொறுப்பு ஒவ்வொருவரிடமும் உள்ளது. பறையின் ஒலி என்றும் ஒலித்துக்கொண்டே தமிழ்ப் பண்பாட்டை உயிர்ப்புடன் கொண்டுசெல்லட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்ப்பதிவம்

பாகம் 3

**இராகவன்**

எழுத்தாளர் நெல்லை க.பேரன் தன்னை எங்கையும் றோட்டு வழிய கண்டால், "எங்கை வெளிக்கிட்டுத் திரியிறாய்? பொம்பர் வந்தாலும் கெதியா வீட்டைபோ!" எண்டு புழுத்தபாட்டில பேசுவாரெண்டு குப்பிழான் ஐ.சண்முகன் சொல்லியிருக்கிறார். நெல்லை க.பேரனைப் பற்றிக் கதை வரேக்கை சண்முகன் இன்னொரு விசயத்தையும் சொல்லுவார். அது ஞானரதம் இதழ் தொடர்பான சங்கதி.

தமிழகத்தின் பிரபல எழுத்தாளர் ஜெயகாந்தன் 'ஞானரதம்' என்ற பெயரில் ஓர் இலக்கியத் திங்கள் இதழை வெளியிட்டுவந்தார். குப்பிழான் ஐ.சண்முகன் அவ்விதழின் தீவிர வாசகராக இருந்தார். அவரிடம் "ஞானரதம்" இதழ்கள் எல்லாம் கால ஒழுங்கில் இருந்தன. ஒரு தடவை சண்முகனைச் சந்திக்கப் போயிருந்த நெல்லை க.பேரன் அவரிடமிருந்து ஞானரதம் இதழொன்றை வாசிப்பதற்கு இரவல் வாங்கச் சென்றிருக்கிறார். அந்த ஞானரதம் இதழின் அட்டையில் ஓர் அழகான வீடு ஓவியமாக வரையப்பட்டிருந்தது. வழமையாகச் சண்முகனிடம் இரவல் வாங்கிச் செல்லும் இதழையோ புத்தகத்தையோ நெல்லை க.பேரன் மறுசந்திப்பில் திருப்பிவிடுவார். ஆனால் அந்த ஞானரதம் இதழை அவர் நெடுங்காலமாகத் திருப்பித்தரவில்லை. சண்முகனும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்திட்டு ஒருமுறை கேட்டுவிட்டார். "ஒரு ஞானரதம் வாங்கிக்கொண்டு போனனீ. இன்னும் கொணந்து தரேல்ல. அதில நான் கொஞ்சம் வாசிக்கக் கிடக்கு. அடுத்தமுறை வரேக்குள்ளை கொணந்து தா!" எண்டு அவரிட்டக் கொஞ்சம் கடுமையாச் சொல்லியிருக்கிறார். "ஒவ்வொருமுறையும் வரேக்குள்ளை கொண்டு வரோணுமெண்டு நினைக்கிறது. பிறகு மறந்து போறது. அடுத்தமுறை வரேக்குள்ளை மறக்காமல் கொண்டுவாறன். குறைநினைக் காதை!" எண்டு நெல்லை க.பேரன் சண்முகனுக்குச் சொல்லிப்போட்டுப் போயிருக்கிறார்.

51

சொன்னபடியே அடுத்தமுறை வரேக்குள்ளை அந்த ஞானரதத்தைத் திருப்பிக் கொணந்து குடுத்திருக்கிறார். அதை வாங்கிப் பாத்த சண்முகனுக்குச் 'ஷொக்கா' போச்சு. அதின்ரை அட்டைப் படத்திலயிருந்த வீட்டைக் காணேல்ல. ஆரோ வெட்டியெடுத்திருக்கினம் எண்டு தெரிஞ்சுது. இலேசில கோபம் வராத சண்முகனுக்கு அண்டைக்குக் கோபம் வந்திட்டுது. "இதென்னடாப்பா உன்ரை வேலை? என்ன இது? இப்பிடியே ஒரு பொறுப்பில்லாமல் செய்யிறது?" எண்டு நெல்லை க.பேரனைக் கண்டபாட்டுக்குப் பேசத்தொடங்கிட்டார். அவர் பேசப்பேச மறுத்து ஒரு வார்த்தையும் பேசாமல் நெல்லை க.பேரன் தலையைக் குனிஞ்சுகொண்டு இருந்திருக்கிறார். அதைப் பாத்தாப்போல சண்முகனுக்கு ஒரு மாதிரியாப் போச்சு.

முடிவில "மன்னிச்சுக்கொள்! இனி ஒருக்காலும் இப்பிடி நடக்காது!" எண்டு நெல்லை க.பேரன் அழுவாரைப்போல சொன்னாராம். அதுக்குப் பிறகு சண்முகனுக்கு மனமிளகியிட்டுது. "அண்டைக்குப் பேரனை நான் அப்பிடி உணர்ச்சிவசப்பட்டுப் பேசியிருக்கவே கூடாது" எண்டு சண்முகன் என்னிட்ட நெல்லை க.பேரனைப் பற்றிய பேச்சு வரும்போதெல்லாம் சொல்லியிருக்கிறார். நான் வாசிக்கத் தொடங்கிய காலத்தில் நெல்லை க.பேரனின் "சத்தியங்கள்" சிறுகதைத் தொகுப்பு என்னை வெகுவாகக் கவர்ந்தது. நாங்கள் நாளாந்தம் சந்திக்கும் நமக்கு நன்கு பரிச்சயமான நபர்களை வைத்து அவர் கதைகளை எழுதியிருந்த விதம் எனக்குப் பிடித்திருந்தது. அவரது "விமானங்கள் மீண்டும் வரும்" என்ற குறுநாவல் இன்றும் என் நினைவில் நிற்குமொரு படைப்பு.

(தொடரும்)

---

நிறுவன கல்வித்துறை சார் அறிஞராக அல்லாமல், அகில இலங்கை ரீதியில் துறைசார் புலமைத்துவ நிறுவனங்களால் அறியப்பட்டவரும் அங்கீகரிக்கப்பட்டவருமாகத் தமிழ்ப் புலமையாளரும் தமிழ் நூலியலாளருமான என்.செல்வராஜா விளங்குகிறார்.



# எழுபத்தியோராவது அகவையில் நூலியலாளர் என். செல்வராஜா

**கணபதி சர்வானந்தா**

ஈழத்துப் பதிப்பிலக்கியத்துறைக்கு நன்கு பரிச்சயமானவர் நூலியலாளர் செல்வராஜா. நூலகவியலாளர், எழுத்தாளர், ஆய்வாளர், பதிப்பாளர் எனப் பன்முக ஆளுமையாக அவர் அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறார். அவர் ஒக்ரோபர் 20 ஆம் திகதியன்று தனது எழுபத்தியொராவது அகவையில் காலடி எடுத்துவைத்திருக்கிறார். சமூக வலைத்தளங்களில் பல்தரப்பட்டவர்கள் அவரைப்பாராட்டி எழுதியிருந்தனர். அதில், அவர் நெடுங்காலம் நலமுடனும் வளமுடனும் வாழ்ந்து தமிழ் மொழிக்கும், தமிழினத்துக்கும் தமிழ்ப்பணி ஆற்றவேண்டும் என்பது தமிழ் உலகத்தின் பிரார்த்தனையாகக் கண்டேன்.

கடந்த ஆண்டு நூலியலாளரின் 70 ஆவது அகவை தினத்தை முன்னிட்டு கொழும்பு, குமரன் பதிப்பகத்தால் வெளியிடப்பட்டிருந்த அவரது சேவைநயப்பு மலரான 'தகைசால் நூலகர்' என்ற நூலில், ஈழத்துப் பதிப்பிலக்கியத்துறைக்கு அவர் ஆற்றிவரும் அரும்பணிகள் பற்றிப் பலர் எழுதியிருக்கிறார்கள். அவற்றில் சிலவற்றை இங்கு தொகுத்திருக்கிறேன்.

அவற்றில் எழுத்தாளர் வவுனியூர் இரா. உதயணன்,

'பல்கலைக்கழகம், ஆவணக்காப்பகம் போன்ற நிறுவனங்கள் செய்யவேண்டிய சேவையைத் தனிமனிதனாகத் தன் சொந்தப்பணத்தில் 'நூல்தேட்டம்" என்ற நூல் விபரப்பட்டியல்களின்மூலம் இத்தனை காலமும் செய்து வருகிறார் நூலகவியலாளர் செல்வராஜா. 2002இல் நூல்தேட்டம் பெருந்தொகுப்பின் வருகை ஆய்வாளர்களுக்கிடையே ஒரு புது வெளிச்சத்தைப் பாய்ச்ச முனைந்தது. 2025ஆம் ஆண்டு வரை பதினேழு தொகுதிகளில் ஈழத்தவர்களின் 17,000 படைப்பாக்கங்களைக் குறிப்புரைகளுடன் நூல்தேட்டம் தன்னகத்தே கொண்டிருக்கிறது. இவரது ஆவணமாக்கல் சேவையைப் பாராட்டி "சிறந்த ஆவணமாக்கல் சேவையாளர் விருது" இலண்டன் இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகத்தால் வழங்கப்பட்டது. இது தவிர "சிந்தனை வட்ட எழுத்தியல் வித்தக விருது" "சின்னப்ப பாரதி அறக்கட்டளை விருது", 'எழுத்தாளர் ஊக்குவிப்பு மைய விருது" போன்ற பல விருதுகளுக்குச் சொந்தக்காரர் இவர்." எனப் பாராட்டி இருக்கிறார்.

நூலகர் எஸ்.ஜெயலட்சுமியின் குறிப்பில் "நூலகவியலாளர் என்.செல்வராஜாவின் 'நூலகவியல்' சஞ்சிகைகளே எமது நூலகவியல் கல்விக்கு தொடக்கப் புள்ளியாகவி ருந்தன. இன்றும்கூட நூலகவியல் துறை மாணவர்களின் முக்கியமான கைந்நூலாக 'நூலகவியல்' சஞ்சிகையே விளங்குகின்றது. 1985 செப்ரெம்பர் முதல் 1991வரை ஏழாண்டுகள் காலாண்டிதழாக நூலகவியல் தொடர்ந்து வெளிவந்தது. பின்னர் 2006 ஜனவரி, [illegible] 2007 [illegible] மாதங்களில் [illegible] இதழ்கள் வெளிவந்தன. 'நூலகவியல்' சஞ்சிகையின் வெளியீடு நின்றுவிட்டாலும்கூட பின்னாளில் 'நூலகவியல்' இதழ்களின் முழுத் தொகுப்பும் தனி நூலாக 2013இல் கொழும்பில் வெளியிடப்பட்டது. பின்னர் 2022இல் 826 பக்கங்கள் கொண்ட திருத்திய மீள்பதிப்பாகவும் இத்தொகுப்பு வெளியிடப்பட்டது.

இலங்கையில் தமிழ் நூலகவியல்துறை அறிமுகப்படுத்தப்பட்ட 1970களின் இறுதிப்பகுதியில் வெளிவந்த இத்துறைசார்ந்த தமிழ் நூல்கள் பெரும்பாலும் நூலகவியலாளர் என்.செல்வராஜாவினதும் அவரது 'அயோத்தி நூலக சேவைகள்' அமைப்பினதும் வெளியீடுகளாகவே இருந்துள்ளன" என்று விதந்துரைக்கின்றார்.

திறனாய்வாளர் ச.சத்தியதேவன் இவரைப்பற்றிச் சொல்கையில்,

"நிறுவன கல்வித்துறைசார் அறிஞராக அல்லாமல், அகில இலங்கை ரீதியில் துறைசார் புலமைத்துவ நிறுவனங்களால் அறியப்பட்டவரும் அங்கீகரிக்கப்பட்டவருமாகத்தமிழ்ப்புலமையாளரும்தமிழ்நூலியலாளருமான என்.செல்வராஜா விளங்குகிறார்.

தமிழ் இனத்தின்மீது தளராத பற்றுக்கொண்டு தமிழ்த் தேசியக் கருத்தியலில் நம்பிக்கையும் வலுவான ஆதரவும் கொண்டிருக்கின்ற அவர் அதன்வழியே தமிழ்த் தேசிய நூலகம் மற்றும் பிராந்திய தேசிய நூலகத்திட்டங்களை நடைமுறைப்படுத்தத் தொடர்ச்சியாக முயன்று கொண்டிருப்பவர்.

இனவாத எல்லைக்குள் தன்னைச் சுருக்கிக்கொள்ளாத இலங்கைப் புலமையாளர்களில் ஒருவராக அவர் உள்ளார். அதற்கு 'புக்ஸ் எஃப்ரோட்' நிறுவனத்தினால் அவரூடாக இலங்கைச் சிறார்களுக்கென அளிக்கப்படுகின்ற இலட்சக்கணக்கான மிகச்சிறந்த பயனுடைய ஆங்கிலப் புத்தகங்களை வடக்கு- கிழக்குடன் நின்றுவிடாது, பின்தங்கியுள்ள தென்னிலங்கைக் கிராமத்து நூலகங்களுக்கும் ஆர்வமுடைய கிராமிய நிறுவனங்களுக்கும் பகிர்ந்தளிக்கின்றமை சான்றாகின்றன. அத்துடன் கொடுக்கப்படுகின்ற நூல்கள் சரியானவர்களிடத்தில் சென்றடைகின்றதையும் சரியான முறையில் பயன்படுத்தப்படுவதையும் தனிப்பட்ட முறையில் அவர் அக்கறையுடன் அவதானிக்கின்றமை அவரது செயல் நேர்த்தியையும் விரிந்த மனப்பான்மையையும் எடுத்துக்காட்டுகின்ற ஒன்றாகும். அதற்காகச் சிங்கள மக்களால் அவர் நன்றியுடன் பெரிதும் கொண்டாடப்படுகின்றவராக இருக்கின்றார் எனக் குறிப்பிட்டிருக்கிறார்.

நூலியலாளர் என்.செல்வராஜாவின் நூல்தேட்டத் தொகுதிகளையும் அவரது ஏனைய நூல்களையும் நூலக நிறுவனத்தின் நூலக வலைத்தளத்தில் நீங்கள் வாசிக்கமுடியும். அத்துடன் அவர் எழுதியிருக்கின்ற அனைத்து நூல்களையும் ஆவணப்படுத்துகின்ற முயற்சியில் நூலக நிறுவனம் ஈடுபட்டுவருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஞ்சுளா




அம்மாவின் இடுப்பிலிருந்து
தொடங்கியது என்வாழ்வு!
இருவரும்....
இணைபிரியாமல் வைராக்கியமாக
எங்கள் வாழ்வைத் தேடினோம்.

மூன்று வயதில் முகவரி இழந்து
என் அப்பாவைத் தொலைத்தேன்
கண்முன்னால் கைதுசெய்யப்பட்டு
விலங்கிடப்பட்டு
பயங்கரவாதி எனக் குறியிட்டு
தண்டனைக்காக சிறைக்குப்போன
என் தந்தை....
அம்மாவின் இடுப்பிலிருந்து
வேடிக்கை பார்த்தவள்....

அப்பா அப்பா என்று உச்சரித்து
உருவகிக்கத் தெரிந்த மழலை
மனது விளங்காத சிறு பருவம்...
கத்திக்கொண்டிருக்கும்
என்னைச் சமாதானம் செய்வதற்கு
அம்மா நிறையப் பாடுபட்டாள்?

அப்பா வருவார் என்பது
நம்பிக்கையாக இருந்தது
இடுப்பில் இருத்திக் கொண்டு
போகும் இடமெல்லாம்
இழுத்துக்கொண்டு திரிந்தாள்..
நியாயம் பெறமுடியாத
நீதிமன்றங்களிலும்...
பொலிஸ் நிலையங்களிலும்
கால் கடுக்க நின்று
களைத்துச் சோர்ந்தாள்

இதுதானா விதியென்று
ஏங்கித்தவித்து...சோறு தண்ணியின்றி
சோர்வாள்....
அடம்பிடித்து அவளை அல்லற்படுத்தும்
என்னைச் சமாளிக்கமுடியாமல்
திண்டாடுவாள்!
நாட்டுக்கு நல்லது செய்யவென
அம்மாவும் அப்பாவும்
வீட்டை விட்டுப் போனதாக
கதை கதையாகச் சொன்னார்கள்..
அப்பாவைக் காப்பாற்ற
யாரும் வரவில்லை என்று
ஒவ்வொரு பொழுதும்
அழுதுமுடித்தாள்...

போர் என்னும் போராட்டம்
எம் வாழ்வின் முழுவதையும்
யாருக்கோ தாரைவார்த்து
உலகம் அறியாமல் வளர்த்ததாம்
வாழ வழியின்றி.......
கைக்குழந்தையோடு
நீதிமன்ற வாசலில் நின்றபோதுதான்
தவறு செய்ததாக வலியெடுத்து
அழுதாள்

இன்று பதினாறு வருடங்கள்
போய் முடிந்தன
பசித்திருந்த பொழுதுகளும்
புசித்திராத வயிறோடும்
ஏழைகளாகத் தெருவெல்லாம்
அலைந்து திரிந்து
ஏக்கம் நிறைந்த விழியோடு
காப்பாற்ற யாரும் வருவாரோ
என ஏங்கி ...நம்பிக்கை கொண்டு
தோற்று விழிகளில் ஈரம் காய்ந்தும்
வழிகள் பிறக்காமல்
வாழ்ந்து தொலைத்தோம்

வரலாறு முழுவதையும்
அறிந்து கொண்டு
என் பெற்றோரின் வேதனைகளை
மட்டுமே மனப்பாடம் வைத்து
படித்துமுடித்தேன்....

போர் வெறுப்புக்குரியதாகியது
மகிழ்வோடும் துணிவோடும்
பலர் வாழ ...
தூற்றப்பட்டவராகவும்
எறியப்பட்டவராகவும்...
அவமானத்தில் குறுகி
நியாயங்களைக் கேட்பதற்கு
கட்டணம் கொடுக்கமுடியாதவர்களாக
ஒதுக்கப்பட்டு .....
அப்பாவைக் காப்பாற்ற அலைந்தோம்...

இளமைகள் முழுவதுமாக
சூறையாடப்பட்டன
ஆயுதங்களைத் தூக்கிக் கொண்டு
புதிய தேசம் பெற புறப்பட்டவர்கள்
காதலித்துத் திருமணம் முடித்தவர்கள்
எதுவும் இல்லாது
வாழ்வாதாரத்தையும்
எதிரியிடம் யாசித்து
கையேந்தி நின்றார்கள்
கர்வங்கள் அனைத்தும் தொலைந்தன!

எதற்காக இந்தப் போர்?
யாரைத்தேற்கடித்து யாரை இழந்து
யாரைப்பிரிந்து.....
பெற்றவர்கள் அந்தரிக்க
ஊரவர் இரக்கம் கொள்ளாது
தெரிந்தவர் என்று சொல்வதற்கு
வெட்கப்பட்டவர்களாக
திசைக்கொன்றாக சிறைவைக்கப்பட்டு
அல்லற்பட்டு
அந்தரித்துக் கிடக்கும் பொழுதுகளை
மட்டுமே இந்தப்போர் தந்தது....

பயங்கரவாதம் ஒன்று சிறை போனது
குழந்தையோடு ஒன்று
வெளியில் நின்றது.....
காமச்சுரப்புகள் கட்டப்பட்டன...

துன்பச்சுரப்புகள்
தூண்டப்பட்டன...
மரணதண்டனையிலும் கொடுமையான
ஆயுள்தண்டனைகளை
காலம் கடுமையாகக் கொடுத்தது
யாரிடமும் நியாயம் கேட்டமுடியாத
பாவப் பிறவிகளாக
எம் வாழ்வின் பயணம்
வழிமாறியது...
பாலுக்கழும் குழந்தையோடு
பாவக்கணக்கை மாற்றியமைக்க
பெரும்பாடுபட்ட என் தாய்

கூழுக்கும் கஞ்சிக்கும்
கையேந்தி நின்று கண்ணீரில் நனைந்து
எதிர்கால வாழ்வை எண்ணி
இரவில் அழுது பகலில் எழுந்து
நம்பிக்கையோடு நகர்ந்தாள்...

ஆயுதங்கள் மிக அழகாக
அவர்களைப் பாவித்துக்கொண்டன..

போராட்ட மேடையில்
ஆடுகள் பலியாகின..
மேடை நாடகங்கள் போல
யாவும் கற்பனையாக மாறிப்போயின...
போராட்டத்தைப்படித்தேன்
வரலாற்றைப்புரிந்தேன்.....
வீரத்தின் மங்கை என் அம்மா
அப்பாவைக் காப்பாற்ற பணம்
தேடினாள் ......
காதலுக்கு விசுவாசியான என் அம்மாவின்
நேர்மைக்குக் காலம் கை காட்டியது..

நண்பியின் உதவியுடன் புலம்பெயர்ந்தாள்
தந்தையைப்பிரிந்தேன்
தாயையும் பிரிந்தேன் ......
உறவினருடன் வாழ்ந்தேன்...
கல்வியின் அவசியமும்
பணத்தின் மதிப்பும்
சிறுவயதிலேயே கற்றேன்
அம்மா என்னை அழைத்துக்கொண்டாள்..
அவளது வீரமும் துணிச்சலும்
அவளை வாழவைத்தன.....
அப்பாவைக் காப்பற்ற

பணத்தை இறைத்தாள்
அவளின் கடின உழைப்பு
பலன் கொடுத்தது......
பதினாறு வருடங்களின் பின்
என் தந்தை சிறையிலிருந்து....
வெளியே வருகிறார்.....

அம்மாவின் இடுப்பிலிருந்து
கைதாகிப்போன
அப்பாவை வழிபார்த்த நான்
விடுதலையின் போதும் ....
அதே இடத்தில் காத்திருந்தேன்...
சிறைவாசம் போன அப்பா
திரும்பியிருக்கிறார்...
அம்மாவின் போராட்டம் வென்றது...
என் வேண்டுகோளும் பேச்சுகளும்
'யாரோ' காதுகளில்
கேட்டிருக்கிறது......

குரல் மட்டும் சிந்தனையில் இருக்க
முகத்தை புகைப்படத்தில் பார்த்து
இதுதான் என அறிந்த என் அப்பா
வருகிறார்....நான் காத்திருக்கிறேன்.
அந்நாளிலிருந்து
என் புத்தகங்கள் எல்லாம்
அவர் நினைவால் நனைந்தன,
அவரைப்போல துணிச்சலாக நடக்க
கற்றுக்கொண்டேன்.

இன்று வானம் புதிய வண்ணம்
கொண்டது,
காற்றுகூட வேறுவிதமாக பாடுகிறது
அப்பா வருகிறார்...
சிறையின் கதவுகள் திறக்கின்றன,
என் இதயம் துடிக்கிறது
எத்தனை ஆண்டுகள் காத்திருந்த
மழை
இப்போது விழுகிறது!
அவர் முகத்தில் உலர்ந்த காற்று,
இளமை தொலைத்து....
கம்பீரம் இழந்து...
காதல் செத்து கண்ணீர் வற்றி...
கண்கள் இருண்டு இரத்தம்
குளிர்ந்து...
நடக்கமுடியாமல்...
உள்ளம் ஊஞ்சலாட வந்த போது
வெளியிடமுடியாத வலி
உள்ளத்தைப் பிளந்ததை
உணர்ந்தேன்!
என் கண்ணீரின் துளிகள் விழுந்தன
துயரமல்ல,
அது சுதந்திரத்தின் மண்வாசனை
அப்பா விடுதலை பெற்றார்.....
சிறையிலிருந்து வந்த அப்பாவின்
கனவுகளிலிருந்து பிறந்தவள் நான்
அவரது போராட்டம்

என் இரத்தத்தில் ஓடுகிறது
இனி நாம் இருவரும் எழுதப்
போகிறோம்
ஒரு புதிய விடியலை,
ஒரு புதுப் பாடலாக,
இனிமேல் யாரும் சிறையில்
அடைக்கப்படாமல்...
பிள்ளைகளோடு அவர்கள்
மகிழ்ச்சியாக வாழவேண்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
26 ஒக்ரோபர் 2025



# மிதிகம லசாவின் உயிரைக் குடித்தது யார்?

துவான் எம்.அசீஸ்

வெலிகம பிரதேசசபையின் தவிசாளர் லசந்த விக்கிரமசேகர என்கின்ற 'மிதிகம லசா' கடந்த 22ஆம் திகதி, பட்டப்பகலில், அவரது தவிசாளர் அலுவலகத்தில் வைத்து இனந்தெரியாதோரால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டுள்ளார். இப்போது நாடு முழுதும் செவ்வந்தியை மறந்துவிட்டு, மிதிகம லசாவைப் பற்றியே பேசிக்கொண்டிருக்கிறது. லசாவைக் கொலை செய்தது யார்? ஏன் கொன்றார்கள்? என்ற விடயங்கள் தொடர்பில் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. நான்கு குழுக்களை அமைத்து இந்தக் கொலை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸார் கூறுகின்றனர்.

லசந்த விக்கிரமசேகர எனும் மிதிகம லசாவுக்கு போதைப் பொருள் விற்பனை தொடர்பிலும், வேறு கூட்டு ரீதியிலான பாதாள உலக அமைப்புகளுடனும் சம்பந்தம் உண்டு. 2021ஆம் ஆண்டு, செப்ரெம்பர் மாதம் நிகழ்ந்த சன்சயின் சுதா எனும் அமில ஹெட்டிஹேவா என்பவரது கொலை தொடர்பில் இவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. இதற்கு முன்னரும் இதே சன்சயின் சுதாவைக் கொலை செய்வதற்கு லசா முயற்சித்தும் அது பயனளிக்காமல் போய்விட்டுள்ளது. அதன் பின்னர்தான் மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் சன்சயின் சுதா தனது மாமியாரின் வீட்டுக்குச் சென்று வரும்போது கொல்லப்பட்டார். இதன் காரணமாக மிதிகம லசா கைது செய்யப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந்தக் காலகட்டத்தில் மிதிகம லசா, மடகாஸ்கரில் கைது செய்யப்பட்டு, தற்போது சிறையில் இருக்கின்ற ருவன் சிந்தக்க விக்கிரமசிங்ஹ என்கின்ற ஹரக்கட்டா என்ற பாதாளக் குழுத் தலைவனோடு இணைந்திருந்தார். மிதிகம ருவான், மிதிகம சூட்டி போன்றவர்கள் ஹரக் கட்டாவின் சகாக்களாக இருந்தார்கள். இவர்கள் அனைவரும் ஒன்றாகவே இருந்தவர்கள். ஆனால் அண்மைக்காலமாக மிதிகம ருவானுக்கும் மிதிகம லசாவுக்கும் இடையில் இருந்துவந்த நட்பு முறிந்துவிட்டது. மிதிகம லசா தங்களுடன் இருப்பதாகக் கூறினாலும், இவர் எதிர்த்தரப்புக் குழுக்களுடனும் தொடர்புகளை வைத்துக்கொண்டுள்ளார் என்ற சந்தேகம் மிதிகம ருவானுக்கு ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில், மிதிகம ருவானின் மிக நெருங்கிய ஆதரவாளர்கள் இருவர் கடந்த செப்ரெம்பர் மாதம் 25ஆம் திகதி வெலிகம, தொலொஸ்கொடவத்த, எப்பாவலப் பகுதியில் வைத்து பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டார்கள். இவர்களில் ஒருவர் ஆண், மற்றவர் பெண். இவர்களிடமிருந்து ரி- 56 ரகத் துப்பாக்கிகள் நான்கும், அவற்றுக்குப் பயன்படுத்தப்படுகின்ற ஒரு தொகை தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டன. இந்த நான்கு துப்பாக்கிகளும் பல்வேறுபட்ட குற்றச் சம்பவங்களில் பயன்படுத்தப்பட்டவை என்பதை விசாரணையாளர்கள் கண்டுபிடித்தனர். இந்தத் துப்பாக்கிகளையும், தோட்டாகளையும் மிதிகம ருவான் மேற்படி இருவரிடமும் கொடுத்ததாகவும் விசாரணைகளின்போது தெரியவந்தது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவரான பெண், மிதிகம ருவானுக்கு மிகவும் நெருக்கமாக இருந்தவர். மிதிகம ருவான் தற்போது பூஸா சிறையில் மிகுந்த பாதுகாப்புடன் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவ்வாறு தடுத்துவைக்கப்பட்டிருக்கின்ற நிலையில், ருவானைப் பார்ப்பதற்காக அடிக்கடி செல்கின்றவர்களில் இந்தப் பெண்ணும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, இந்தப் பெண்ணின் கைதானது ருவானுக்கு பேரிடியாக அமைந்துவிட்டது. இது அவரை ஆழமாகப் பாதிக்கச் செய்தது.

மிதிகம லசா கொடுத்த தகவலின் அடிப்படையில்தான் மேற்படி இருவரும் கைதுசெய்யப்பட்டு, ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன என மிதிகம ருவானுக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது. மிதிகம ருவானுக்கு, லசா மீது ஏற்கனவே இருந்த சந்தேகங்கள் இந்தச் சம்பவத்துடன் மேலும் அதிகரித்துவிட்டன. எனவே மிதிகம லசாவின் கொலை, மிதிகம ருவானின் திட்டமாகவும் இருக்கலாம் என்ற சந்தேகம் பரவலாக எழுந்துள்ளது.மிதிகம லசா கொலை தொடர்பான வீடியோவில் அவரைக் கொலை செய்த துப்பாக்கி தாரி

## அதிரவைக்கும் பயங்கரத் தகவல்கள்

கறுப்புநிறமுகக்கவசம் அணிந்தபடி வெலிகம பிரதேச சபைக்குள் நுழைந்துள்ளார். இந்தக் கொலை நடந்த தினம் பிரதேச சபையின் பொதுமக்கள் குறை தீர்க்கும் தினமாகும். எனவே, அலுவலகத் தேவையின் நிமித்தம் வந்தவரைப் போல கொலையாளியும் பிரதேசசபைக்கு வந்திருக்கிறார்.

இந்த வேளையில் தவிசாளர் லசந்த விக்கிரமசேகரவின் அறைக்குள் பெண்ணொருவர் சென்று வெளியில் வந்ததன் பின்னர், கொலையாளி ஏதோவொரு தேவைக்காகச் செல்லும் போர்வையில் சென்று துப்பாக்கிச்சூடு நடத்தியிருக்கின்றார். கொலையாளி எனச் சந்தேகிக்கப்படுகின்ற நபர் பிரதேசசபைக்கு மோட்டார் சைக்கிளில் வந்திருக்கிறார். துப்பாக்கிச்சூட்டினை நடத்திவிட்டு இவர் இன்னொரு நபருடன் மோட்டார் சைக்கிளில் ஏறி, சுதந்திரமாகச் செல்வதை சி.சி.ரி.வி. காட்சிகள் காட்டிக்கொடுத்துள்ளன.

மிதிகம லசா என்கின்ற லசந்த விக்கிரமசேகர பல குற்றங்கள் தொடர்பில் சிறைவாசம் அனுபவித்தவர். மோசடிகள் தொடர்பில் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை அனுபவித்துவருபவர். 2008 ஆம் ஆண்டு ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரிந்த பெண்ணொருவரின் தங்க ஆபரணங்களைத் துப்பாக்கிமுனையில் கொள்ளையடித்தமை, ஒரு நபர்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு அவரைக் காயப்படுத்த உதவியமை, ரி- 56 ரகத் துப்பாக்கியொன்றை தனது வீட்டில் வைத்திருந்தமை, நிதி மோசடிகள் என இவருக்கு எதிராக பல குற்றச்சாட்டுகள் தொடர்பில் ஏராளமான வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன.

இவர் 2018ஆம் ஆண்டில் உள்ளூராட்சிசபைகளுக்கானத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியினை பிரதிநிதித்துவப்படுத்திப் போட்டியிட்டிருந்தார். கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இவர் பிரதேசசபைத் தவிசாளராவதற்கு மொட்டுக் கட்சியும் உதவியிருந்தது. இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமானது அரச நிறுவனமொன்றுக்குள் அதாவது பிரதேசசபைக்குள் நடந்திருக்கிறது. இது, மக்கள் பாதுகாப்பு தொடர்பில் பாரதூரமானதொரு பிரச்சினையை ஏற்படுத்தியிருக்கின்றது. ஏற்கனவே நீதிமன்றத்துக்குள் இத்தகையதொரு சம்பவம் இடம்பெற்றிருந்தது. அதில் கணேமுல்ல சஞ்சீவ என்ற பாதாளக்குழுத் தலைவர் கொல்லப்பட்டார். தற்போது நடத்தப்பட்டுள்ள துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கொல்லப்பட்டிருப்பவர் பாதாளக் கும்பலோடு தொடர்புபட்டவராக இருந்தாலும், அடிப்படையில் மக்கள் பிரதிநிதியொருவராவார். வெலிகம உள்ளூராட்சி அதிகாரத்திற்கு உட்பட்ட பிரிவின் முதலாவது குடிமகன் மிதிகம லசா தான். எனவே, பொதுமக்கள் பாதுகாப்புத் தொடர்பில் மீண்டும் ஒரு கேள்விக்குறியை இந்தச் சம்பவம் ஏற்படுத்தியிருக்கின்றது.

மிதிகம லசாவுக்கு பல்வேறு குற்றப்பின்னணிகள் இருந்தன. அந்தக் குற்றங்கள்தான் இவரைப் பின்தொடர்ந்து வந்து உயிரைக் குடித்துள்ளன எனக் கூறலாம். ஆனாலும், இவர் இப்போது பிரதேசசபையின் தவிசாளர்.


குற்றங்களுடன் தொடர்புடைய ஒருவருக்குத் தேர்தலில் போட்டியிடுவதற்கென வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கு ஐக்கிய மக்கள் சக்தி ஏன் வாய்ப்பளித்தது என்பது தொடர்பில் தனியாக ஆராயவேண்டும். அத்தகையதொரு நபருக்கு மக்கள் வாக்களிக்கின்றனர் என்றால், அத்தகைய தேர்தல் தொடர்பிலும் தனியாக ஆராயவேண்டும். குற்றங்கள் பலவற்றுடன் தொடர்புடைய மோசமானதொரு நபரை உள்ளூராட்சிசபையொன்றின் அதியுயர் பதவிக் கதிரையில் அமர வைப்பதற்கு ஓர் அரசியல் கட்சி செயற்படுகிறதென்றால், அதுதொடர்பிலும் தனியாக ஆராயவேண்டும். மேலும் லசந்த விக்கிரமசேகரவுக்கு பல்வேறு தரப்பினருடன் கோபதாபங்கள் ஏற்பட்டிருந்ததாகவும், அரசியல் ரீதியான எதிரிகள் இருப்பதாகவும் சொல்லப்படுகின்றது. இந்த நிலையில் இவர், தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவித்து கடந்த ஓகஸ்ட் மாதம் பொலிஸ்மா அதிபருக்குக் கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளாரெனவும் தெரிவிக்கப்படுகின்றது. அதேநேரம். தனது உயிராபத்தை முன்னிட்டு இவர் தலைமறைவான வாழ்க்கையை மேற்கொண்டு வந்ததாகவும், பிரதேசசபையின் பொதுமக்கள் குறைதீர்க்கும் தினத்துக்கும் சபை அமர்வுகளுக்கும் மட்டுமே வந்து சென்றார் எனவும் கூறப்படுகின்றது.வெலிகம பிரதேசசபைக்கான தேர்தலின் பின்னர் அந்தச்சபையை அமைப்பதில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தன. ஒரு சந்தர்ப்பத்தில் அதன் உறுப்பினர்கள் இருவர் கடத்தப்பட்டனர் எனவும் சொல்லப்பட்டது.

இத்தகைய மனிதப் படுகொலைச் சம்பவங்களை சாதாரணமாக எடுத்துக்கொள்ளமுடியாது. பொதுமக்களின் பாதுகாப்புத் தொடர்பில் மிகுந்த அவதானத்தைச் செலுத்தி, உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு, அதனை அரசு உறுதிசெய்யவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிக்கூடம் போக ஆசையா இருக்கு; என்னைச் சேர்த்துவிடுவீங்களா?

○ மு. தமிழ்ச்செல்வன்



> தவறு எதுவும் செய்யாத எனது மகனை நான் ஏன் சிறுவர் நன்நடத்தை அலுவலகத்துக்கு அழைத்துச்செல்ல வேண்டும்? அன்றிலிருந்து 10 மாதங்களாக எனது மகனின் பாடசாலை கல்வி தொடரமுடியாத நிலையில் அந்தரத்தில் ஊசலாடுகின்றது. நான் எனது அறிவுக்கு எட்டிய வகையில் போகக் கூடிய இடங் களுக்கெல் லாம் போய்வந்துவிட்டேன். ஒரு இடத்திலும் தீர்வு கிடைக்கவில்லை.

அன்றொரு நாள் பகல் 11 மணி. கிளிநொச்சி நகரில் உள்ள கடையொன்றுக்கு சிறுவன் ஒருவன் வந்தான். ஒரு கிலோவை மிஞ்சாத அளவில் சில பொருள்களைக் கொள்வனவு செய்தான். அந்தச்சிறுவனின் நுகர்வு முறை அவனது குடும்பம் வறுமைக்குட்பட்டது என்பதனைச் சொல்லாமல் சொல்லியது. பொருள்களை வாங்கிவிட்டு வெளியே வந்த சிறுவனிடம்

"ஏன் தம்பி பள்ளிக்கூடம் போகவில்லை?' என்றேன்.

''பள்ளிக்கூடம் போக ஆசையாத்தான் இருக்கு. ஆனால் சேர்க்கினம் இல்லை' என்றான் அந்தச் சிறுவன். அவனின் பதில் அதிர்ச்சியாக இருந்தது. எனவே இதற்குள் ஏதோ விடயம் இருக்கிறது என்பதனைப் புரிந்துகொண்ட நான் மேலும் சில கேள்விகளைக் கேட்டேன். அவனின் பதில் மேலும் கவலையினை ஏற்படுத்தியது. எனவே சிறுவனின் தந்தையின் தொலைபேசி இலக்கத்தைப் பெற்று அவருடன் தொடர்பு கொண்டேன்.

எனது தொலைபேசி அழைப்புக்குப் பதிலளித்துவிட்டு 'வார பஸ் கோல்ட் இறக்கம், இறக்கம், இறங்கிற ஆட்கள் காசைத் தந்திட்டுப் போங்கோ' என்ற அவரின் அறிவிப்புக்கள் மூலம் அவர் ஒரு பஸ் நடத்துநர் என்பதனைப் புரிந்துகொண்டேன். இதேவேளை அதே பஸ்ஸுக்குள் இருந்து.

'உன்னால் முடியும் தம்பி தம்பி, அட உனக்குள் இருக்கும் உன்னை நம்பி தோளை உயர்த்து! தூங்கியுள்ள நாட்டை எழுப்பு!' என்ற கமலஹாசனின் படத்திலிருந்து இடைக்காலப் பாடல் ஒலித்துக்கொண்டிருக்கும் போதே,

'ஹலோ சொல்லுங்கோ' என்றார். நான் என்னை அறிமுகப்படுத்திவிட்டு,

'உங்கள் மகனின் விடயமாகப் பேசவேண்டும்' என்றேன்.

'அண்ணை பின்னேரம் ஏழு மணியாகும், நான் வீட்டை போவதற்கு . அதற்குப் பிறகு வீட்ட வாங்கோ, கதைப்பம்' என்று வீடு இருக்கும் முகவரியைச் சொன்னார். பின்னர் 'ஏறின ஆட்கள் உள்ளுக்குப் போங்கோ உள்ளுக்கு போங்கோ 'எனத் தனது கடமையை பார்க்கத் தொடங்க நான் தொலைபேசி அழைப்பினைத் துண்டித்துக் கொண்டேன்.

இரவு 8 மணியளவில் அவர் குறிப்பிட்ட முகவரிக்குச் சென்றேன். அவர் தனது 11 வயது மகன் இந்த வருடமும் முழுவதும் பாடசாலைக்குச் செல்லவில்லை என்று சொல்லி, அதற்கான காரணத்தையும் விவரித்தார்.

' ஆரம்பத்தில் நாங்கள் பன்னங்கண்டியில் வசித்த போது அங்குள்ள பாடசாலையில் மகளும், மகனும் கல்விகற்றனர். பன்னங்கண்டி பாடசாலையில் தரம் ஒன்பது வரையுமே வகுப்புகள் உண்டு அதன் பின்னர் மகள் சென்.திரேசா பாடசாலைக்குத் தனது கல்வியை தொடர்வதற்கு சேர்த்துகொள்ளப்பட்ட போது மகளுடன் இணைந்து மகனையும் தரம் மூன்றில் குறித்த பாடசாலையில் சேர்த்தோம். இதன் பின்னர் கிளிநொச்சி நீதிமன்றுக்குப் பின்புறமாக வீடு ஒன்றை வாடகைக்கு பெற்று அங்கு வசித்த போதும் மகளும் மகனும் சென். திரேசா மகளிர் கல்லூரிக்கே சென்றனர் சென்.திரேசா மகளிர் கல்லூரி என்பதால் அங்கு ஆண்பிள்ளைகள் தரம் 5 வரையே கற்கமுடியும். அதனால் எமது மகன் தரம் 5 க்கு பின்னர் அங்கு விடுகைப் பத்திரத்தையும் பெற்றுக்கொண்டோம். அதேசமயத்தில் கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு அருகில் மின்சாரசபை வீதியில் வீடு ஒன்றை வாடகைக்குப் பெற்று அங்கு குடியேறினோம். அதுவொரு வீட்டுத்திட்ட வீடு. எனினும் அது முழுமையாகக் கட்டிமுடிக்கப்படாத நிலையில் இருந்தது. அந்த வீட்டின் சுவர் மற்றும் நிலம் என்பன பூசப்படவில்லை. அறை குறையாக உள்ள வீடு என்பதனால் மிகவும் குறைந்த வாடகையில் அதனைப் பெற்றோம்.

இதன் பின்னர் மகனை கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இணைப்பதற்கு முயன்றோம். இதற்காக எனது மனைவி நான்கு தடவைகள் மத்திய கல்லூரிக்குச் சென்றார். ஆனால் எனது மகனை தரம் 6 இல் இணைப்பதற்கு அந்தப் பாடசாலை நிர்வாகம் மறுப்புத் தெரிவித்துவிட்டது. எனது மகன்தரம்05புலமைப்பரிசில் பரீட்சையில் குறைவான புள்ளிகள் பெற்றதனாலும், சென்.திரேசா பாடசாலையில் கல்வி கற்ற போது பாடசாலை அவரின் வரவு சீரின்மையாக இருந்தமையுமே இதற்குக் காரணம் . எங்களுடைய பாடசாலை ஒரு தேசிய பாடசாலை. இங்கு இவ்வாறான மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளமுடியாது என்று மத்திய கல்லூரி கைவிரித்துவிட்டது.

எனது மகன் சென்.திரேசாவில் கல்விகற்றபோது அவரது வரவில் சீரின்மை இருந்தது உண்மைதான். ஆனால் அதற்குக் காரணம் வேறு. சென்.திரேசாவில் கல்வி கற்ற போது மகனுக்கு சுகவீனம் ஏற்பட்டு பல நாள்கள் மருத்துவமனையில் வைத்திருந்தோம். பின்னர் அடிக்கடி அவர் சிகிச்சைக்காக மருத்துவமனைக்குச் செல்லவேண்டி இருந்தது. இதுவே அவரது வரவு சீரின்மைக்குக் காரணம். இதற்கான மருத்துவ அறிக்கைகள் இருந்தபோதும், மத்தியகல்லூரி எமது மகனை தமது பாடசாலையில் சேர்க்கவில்லை. இதன்பின்னர் சுமார் 3 கிலோமீற்றருக்கு அப்பால் உள்ள கனகாம்பிக்கைக்குளம் பாடசாலைக்கு மகனை அழைத்துக்கொண்டு சென்றோம்.

' காலடியில் பாடசாலையினை (மத்திய கல்லூரியை) வைத்துக்கொண்டு ஏன் இவ்வளவு தூரம் மகனைக் கொண்டு வருகின்றீர்கள்? அதுவும் சுகவீனமான பிள்ளையை?' என அந்தப் பாடசாலையின் அதிபர் கேட்டார். ஆனாலும் அங்கும் அவர்கள் அனுமதி தரவில்லை. அதன் பின்னர் கனகபுரம் மகாவித்தியாலயத்துக்குச் சென்றோம். அங்கு அவர்கள் மகனைச் சேர்த்துக்கொள்ள இணக்கம் தெரிவித்த போதும், பாடசாலை நிர்வாகத்தினர் ஒரு நிபந்தனையை விதித்துள்ளனர்.

'உங்கள் மகனுக்கு அடிக்கடி சுகவீனம் ஏற்படுவதால் , அவரை தானாகவே பாடசாலைக்கு வரவிடாமல், பெற்றோர்தான் நாளாந்தம் பாடசாலைக்கு கொண்டுவந்து, பின்னர் ஏற்றிக்கொண்டு செல்லவேண்டும்' என்பதே அந்த நிபந்தனை. அத்தோடு அங்கும் 'ஏன் காலடியில் பாடசாலையினை வைத்துக்கொண்டு இங்கு வருகின்றீர்கள்?' என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளனர். தினமும் மகனை ஏற்றி இறக்குவதற்கு வசதிவாய்ப்புகளும், குடும்பச் சூழலும் இடமளிக்காமையால் கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்துக்குச் சென்றோம். அங்கும் உரிய அதிகாரிகள் இந்தப் பிரச்சினையை ஒரு பொருட்டாகக் கவனத்தில் எடுக்கவில்லை.

'மத்திய கல்லூரி ஒரு தேசியப் பாடசாலை . அது எமது நிர்வாகத்தின்கீழ் வருகின்ற பாடசாலை இல்லை . மகனுடன் சிறுவர் நன்னடத்தை அலுவலகத்துக்குச் செல்லுங்கள்' என்று எம்மைக் கேவலப்படுத்துவது போன்று கூறினர். தவறு எதுவும் செய்யாத எனது மகனை நான் ஏன் சிறுவர் நன்நடத்தை அலுவலகத்துக்கு அழைத்துச்செல்ல வேண்டும்? அன்றிலிருந்து 10 மாதங்களாக எனது மகனின் பாடசாலை கல்வி தொடரமுடியாத நிலையில் அந்தரத்தில் ஊசலாடுகின்றது. நான் எனது அறிவுக்கு எட்டிய வகையில் போகக் கூடிய இடங்களுக்கெல்லாம் போய்வந்துவிட்டேன். ஒரு இடத்திலும் தீர்வு கிடைக்கவில்லை. ஒவ்வொரு நாளும் காலையில் கேற்றடியில் நின்று பாடசாலைக்கு செல்லும் மாணவர்களை பார்த்துக்கொண்டிருக்கும்போது, என் மகன் படிக்கப்போகாமல் வீட்டில் நிற்கி றானே என எண்ணுகையில் அழுகைதான் வரும். ஆனால் ஒரு எழைத் தந்தையான நான் என்னதான் செய்ய முடியும்? வேலை முடிந்து வீட்டுக்கு வரும்போது ஒவ்வொரு நாளும்'அப்பா என்னை பள்ளிக்கூடம் சேர்ப்பதற்கு கதைச்சனீங்களோ? 'என மகன் கேட்பான் . சில காலம் தொடர்ந்து கேட்டவன் இப்போது அப்படிக் கேட்பதை நிறுத்திவிட்டான்.

அவனை ஓரளவுக்கு என்றாலும் படிப்பிக்கவேண்டும் என்பதே எனது ஆசை, அவனும் பள்ளிக்கூடம் போக வேண்டும் என்ற ஏக்கத்தோடு இருக்கிறான். ஆனால் என்ன வழி என்றுதான் தெரியவில்லை' என்று ஏக்கத்தோடும், கவலையோடும் சொல்லி முடித்தார் அந்த மாணவனின் தந்தை.


தந்தையுடன் உரையாடிவிட்டு வெளியே வந்தபோது அந்தச் சிறுவன் என்னிடம் ஓடிவந்தான்.

'மாமா நீங்கள் இந்தச்செய்தி போட்டால் அதற்குப் பிறகாவது என்னைப் பள்ளிக்கூடத்தில சேர்ப்பினமா?' என்று ஏக்கத்தோடு கேட்டான். அவனிடம் கூறுவதற்கு என்னிடம் பதில் இருக்கவில்லை . உங்களில் யாராவது அவனுக்குப் பதில் சொல்வீர்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கைவண்ணம்





K.தனுஸ்காந்
தரம்- 13
யா/கொக்குவில்
இந்துக் கல்லூரி.



ஜெ.ஜெபோன்
தரம்- 9
யா/ஹாட்லிக்
கல்லூரி.



பா. லதுர்ஷன்
தரம் - 9A
யாழ்ப்பாணம்
இந்துக் கல்லூரி

## வழிகாட்டுவோம்





## ஓட்டைப்பானையும் ஒளிரும் பூக்களும்

ஓர் கிராமத்தில் ஏழை விவசாயி ஒருவன் வாழ்ந்துவந்தான். அவன் தன் வீட்டுத் தேவைக்காகத் தினமும் ஆற்றிலிருந்து தண்ணீர் எடுத்துவருவதை வழக்கமாகக் கொண்டிருந்தான். தண்ணீர் எடுத்துவர அவன் இரண்டு பானைகளை வைத்திருந்தான்.

அந்தப் பானைகளை ஒரு நீளமான தடியின் இரண்டு முனைகளிலும் தொங்கவிட்டு, தடியைத் தோளில் சுமந்து செல்வான். இரண்டு பானைகளில் ஒன்றில் சிறிய ஓட்டை இருந்தது.

அதனால் ஒவ்வொருநாளும் வீட்டுக்குவரும்பொழுது, குறையுள்ள பானையில் பாதியளவு நீரே இருக்கும். குறையில்லாதப் பானைக்குத் தன் திறன் பற்றி பெருமை. குறையுள்ள பானையைப் பார்த்து எப்பொழுதும் அதன் குறையைக் கிண்டலும் கேலியும் செய்து கொண்டே இருக்கும். இப்படியே இரண்டு வருடங்கள் கழிந்துவிட்டன. கேலியைப் பொறுக்க முடியாத பானை அதன் எஜமானனைப் பார்த்துப் பின் வருமாறு கேட்டது.

"ஐயா! என் குறையை நினைத்து நான் மிகவும் கேவலமாக உணர்கிறேன். உங்களுக்கும் தினமும் என் குறையால், வரும் வழியெல்லாம் தண்ணீர் சிந்தி, உங்கள் வேலைப்பளு மிகவும் அதிகரிக்கிறது. என் குறையை நீங்கள் தயவுகூர்ந்து சரிசெய்யுங்களேன்" என்றது.

அதற்கு விவசாயி, "பானையே! நீ ஒன்றைக் கவனித்தாயா? நாம் வரும் பாதையில், உன் பக்கம் இருக்கும் அழகான பூச்செடிகள் வரிசையைக் கவனித்தாயா? உன்னிடமிருந்து தண்ணீர் சிந்துவது எனக்கு முன்னமே தெரியும். அதனால்தான் வழி நெடுக பூச்செடி விதைகளை விதைத்து வைத்தேன். அவை நீ தினமும் சிந்திய தண்ணீரில் இன்று பெரிதாக வளர்ந்து எனக்குத் தினமும் அழகான பூக்களை அளிக்கின்றன. அவற்றை வைத்து நான் வீட்டை அலங்கரிக்கிறேன். மீதமுள்ள பூக்களை விற்றுப் பணம் சம்பாதிக்கிறேன்" இதைக் கேட்ட பானை கேவலமாக உணர்வதை நிறுத்திவிட்டது.

**நீதி : அடுத்தவர் பேச்சைப் பற்றிக் கவலைப்படாமல் தன் வேலையைக் கருத்துடன் செய்யத் தொடங்கியது அடுத்தவர் பேச்சைப் பற்றிக் கவலைப்பட்டால், நாம் எந்த வேலையையும் செய்ய முடியாது!!**

## சிவபூஜையில் கரடியா?

தெரிந்தவருடன் சுவாரஸ்யமாக பேசிக்கொண்டிருக்கும்போது இன்னொருவர் குறிக்கிட்டால், சிவபூஜையில் கரடி புகுந்தமாதிரி என்று சொல்வார்கள். அது எப்படி பூஜை அறைக்குள் கரடி வரமுடியும்? உண்மையில் இதில் 'கரடி' என்பது மிருகத்தை குறிக்காது. 'கரடி' என்பது ஒரு வகை வாத்தியக் கருவி. முற்காலத்தில் மன்னர்கள் சிவபூஜை செய்யும்போது கரடி வாத்தியம் வாசிக்கச் செய்வார்கள். இதைத்தான் சிவபூஜையில் கரடி என்று நாம் வேறு ஒரு பொருளில் பயன்படுத்துகிறோம்.

## அறிவுமொழி

நல்ல நூல்கள் உலகை அறிய உதவும்!.
மேலும் உன்னை அறியவும் உதவும்!

**எட்வர்ட் பிரேக்கர்**

குப்பைக் கருத்துகளை அலங்காரமாகக் கூறினாலும் அது குப்பைக்குத்தான் போய்ச் சேரும்.

**பெஞ்சமின் பிராங்ளின்**

சுவடுகளை விட்டுச் செல்லாதவனின் வாழ்க்கை பின்னோக்கிச் செல்கிறது.

**ஹெர்சன்**

முயற்சி என்பது கானல் நீர் அன்று! அது ஆற்றின் கரைக்கே அழைத்துச் செல்லும்!

**கதே**

நிதானம், சகிப்புத்தன்மை, கருணை ஆகியவற்றில் அடங்கியதே விவேகம்.

**ஸரஸ்துரர்**

மிக உறுதியான மனிதனைக் கண்டு வேலையே அஞ்சும்!

**சீனப்பழமொழி**

வெற்றிக்காகப் போராடும்போது வீண்முயற்சி என்று சொல்பவர்கள், வெற்றி பெற்றபின் விடா முயற்சி என்பார்கள்!

**கண்ணதாசன்**

உனக்குள்ளேயே உறங்கி உறைந்து கிடக்கும் தெய்வீகத் தன்மையை வெளிப்படுத்தி, அமைதி, ஆனந்தம், ஞானம் ஆகியவற்றை அடைந்து நிறைவுபெற வகைசெய்வதே இம்மனிதப் பிறவி.

**சத்ய சாய்பாபா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org